வெளியீடு எண் 46.

மருதவனம்

என்னும்

திருவிடைமருதூர்

4681
24/7/80



ருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான
ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம்
திருவிடைமருதூர்
1980

G'23:38.21193
N80
107574

வெளியீடு எண் 46.

468/80

உ
சிவமயம்

மருதவனம்

என்னும்

திருவிடைமருதூர்

இது

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து

இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

வெளியிடப்பெற்றது

திருவிடைமருதூர்
ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம்
1—3—1980

மகாமகம் வெளியீடு

திருவிடைமருதூர்

ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம்

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —



ஸ்ரீ மகாலிங்கப்பெருமான்

உ

சிவமயம்

பதிப்புரை

திருச்சிற்றம்பலம்

"இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேற்பிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளும் இடைமரு தன்கழல்
செம்மை யேதொழ வார்வினை சிந்துமே."

திருச்சிற்றம்பலம்.

இன்பத் தமிழகத்தினைத் தெய்வமணங் கமழும் நாடாகத் திருக்கோயில்கள் பல அலங்கரிக்கின்றன. மக்கள் வாழ்வு இன்ப வாழ்வாக, அமைதி வாழ்வாக அமைவது திருக்கோயில்களாலேயே. வாழ்வில் பல்வேறு வகையினராய்ப் பிரிந்து நிற்கும் மக்களை ஒன்றுபடுத்துவன கோயில்கள். அருங்கலைகளையும் நாட்டு வரலாற்றினையும் பேணிக்காக்கும் கலைக் களஞ்சியங்களாகவும் திருக்கோயில்கள் திகழ்கின்றன.

திருக்கோயில் வழிபாட்டா லாகும் உயரிய பயன்களைக் கண்ட நம் முன்னோர்கள், மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புகளமைந்த திருத்தலங்களைத் தலயாத்திரையாகச் சென்று வழிபடுதலைத்

தம் கடமையாகக் கொண்டனர். அவ்வழியில், இன்றும் அன்பர்கள் தலங்களுக்குச் சென்று முறையாக வழிபட்டு வருகின்றனர். அப்படி வரும் அன்பர்கள் பெருமை மிகுந்த இத்தலத்தின் சிறப்புக்களைப்பற்றிச் சுருக்கமாகவேனும் அறிந்து வழிபட இச்சிறுநூல் வெளியிடப்படுகிறது.

சோழ நாட்டுத் தலங்களுள் திருவிடைமருதூர் மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புகளால் மிகுந்த பெருமையுடையது. திருஞானசம்பந்தர் முதலாகிய சமயாசாரியர்கள் நால்வராலும், கருவூர்த் தேவர், பட்டினத்துப் பிள்ளையாராலும் இத்தலம் திருமுறைகளில் மிக விரிவாகப் புகழ்ந்து போற்றப் படுகிறது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்களும், வடமொழி தென்மொழிகளில் அமைந்த தலபுராணங்களும் வேறு பல தமிழ்ப் பிரபந்தங்களும் இத்தலப் பெருமைகளை நன்கு விளக்குவனவாகும்.

பெரிய அன்பில் வரகுணதேவர், பட்டினத்துப் பிள்ளையார், பத்திரிகிரியார் முதலிய பெரியோர்கள் பலர் இத்தலத்தில் தங்கியிருந்து பெருமானை வழிபட்டு அருள்பெற்றுள்ளார்கள். வரலாற்றுப் புகழுடைய வரகுண பாண்டியன் சிவப்பேரன்பினனாய் இத்தலத்திற் செய்த அருஞ் செயல்களும் திருப்பணிகளும் மிகப் பலவாகும்.

இத்தகு பெருமைகள் கொண்டு திகழும் இத் திருக்கோயில் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 22-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருட் பரிபாலனத்தில் திருப்பணிகள் செய்விக்கப்பெற்று மகா கும்பாபிஷேகமும், மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் இத் திருக்கோயில் சார்பாகத் திருமுறைப் பாராயணம், திருமுறைக் கருத்தரங்கம், சைவநூல் வெளியீடு, சமயச் சொற்பொழிவு முதலிய உறுதி பயக்கும் செயல்கள் நிகழ அருளாணை வழங்கிச் சிவநெறியினையும், தமிழ் மொழியினையும் பாதுகாத்து வருதலைச் சைவ நல்லுலகு போற்றிப் பயன் கொள்கின்றது.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் கட்டளையிட்டருளியபடி 1968-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இத்தல வரலாற்றுச் சுருக்கநூல் சில திருத்தங்களுடன் தலத் திருப்பதிகங்கள், திருப்புகழ், இவ்வாதீனத்து மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய 'மருதவாணர் பதிகம்', அவர்களது மாணவ நன்மணியாக விளங்கியவர்களாகிய மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் இயற்றிய 'ஸ்ரீ ஏகநாயக ஊசல்', 'ஸ்ரீ ஏகநாயகர் தாலாட்டு' என்பன சேர்க்கப்பெற்று வெளியிடப் படுகின்றது.

அடியேனை நன்னெறிப் படுத்துப் பணி கொண்டருளும் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் பொற்பாத கமலங்களை மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகின்றேன்.

எளியேனது அறிவுக் குறையால் நேரிட்ட பிழைகளைப் பொறுத்தருள அறிஞருலகினைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

"ஸ்ரீ மெய்கண்டதேவன் திருமரபு நீடு தழைக"

இங்ஙனம்,

திருவிடைமருதூர்,
20—2—80.

பா. மகாலிங்கம்
தலைமைத் தமிழாசிரியர்
திருவாவடுதுறை ஆதீனம்
மேல் நிலைப்பள்ளி.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்

மருதவனம்

என்னும்

திருவிடைமருதூர்

இருப்பிடம்

பொன்னியாறு புனல்மல்கிப் பல வளங்களையும் தருவது சோழநாடு. சோழநாட்டிலே பொன்னி யாற்றுக்குத் தென்பாலும் திருவிடைமருதூர் புகை வண்டி நிலயத்திற்கு வடபாலும் ஸ்ரீ மகாலிங்கப் பெருமான் திருக்கோயில் அமைந்துள்ளது. இக் கோயிலின் அமைப்பு சோழ பாண்டிய மன்னர்களின் மேன்மையை விளக்குவதாகத் திகழ்கிறது.

இத்திருக்கோயில் மிக்க அழகும் அமைதியும் இனிமையுங்கொண்டு கிழக்குமுகமாய் விளங்குகிறது. கீழைக் கோபுரத்துத் திருமதிலையொட்டி ஒரு ஏக்கர் அளவில் காருணியாமிருத தீர்த்தம் பொலிவுடன் உள்ளது. நாற்புறமும் சுற்றுச்சுவரும் மூன்று பிரதான வாயில்களும் பெற்று விளங்குகிறது.

கோயிலின் நான்குபக்கமும் பெரிய திருமதிலோடு கூடிய நான்கு இராஜகோபுரங்கள் உள்ளன. அவை களுள் மேற்கேயுள்ள இராஜகோபுரம் மிகப் பெரிய தாகும். இவையன்றிக் கோயிலுள் பாண்டியன்

கோபுரம் என்ற ஒன்றும் உள்ளது. இதனையும் சேர்த்து இக்கோயிலில் ஐந்து கோபுரங்கள் உள்ளன.

இத்திருக்கோயிலில் மூன்று பிரகாரங்கள் உள்ளன. அவை அசுவமேதப் பிரதட்சிணப் பிரகாரம், கொடு முடிப் பிரகாரம், பிரணவப் பிரகாரம் என்பன. பின்னிரண்டு பிரகாரங்களும் மூலவர் திருக்கோயிலைச் சுற்றியுள்ளன. கோயிலைச் சூழ்ந்து நான்குபுறமும் மடவிளாகங்களும் தேரோடும் நான்கு பெரிய வீதிகளும் நன்முறையில் அமைந்து விளங்குகின்றன.

சுற்றுக்கோயில்

தேரோடும் நான்கு வீதிகளின் முனைகளிலும் விநாயகர் கோயில்கள் உள்ளன. கீழவீதியின் கீழ்ப்பால் உள்ள விசுவநாதபுரத்தில் விசுவநாதர்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமாக உள்ளது. அண்மையில் அது பெரும் பொருட்செலவில் திருப்பணி செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது மேலவீதியில் ரிஷிபுரீஸ்வரர் கோயில் உள்ளது. தெற்கு வீதியில் ஆத்மநாதர் ஆலயம் உள்ளது, கோயிலின் வடபால் சொக்கநாதர் ஆலயம் உள்ளது. நான்கு திசைகளிலும் நான்கு சிவாலயங்கள் விளங்க நடுவில் மகாலிங்கப்பெருமான் திருக்கோயில் அமைந்துள்ளதால் இது பஞ்சலிங்க ஸ்தலமெனப்படும். இவையேயன்றி வடக்குக் கோபுரத்தைச்சார்ந்து அகோர வீரபத்திரர் கோயிலும், மேற்குக் கோபுர நுழைவாயிலில் குமரன் கோயிலும் உள்ளன.

உட்கோயில்

கீழ்க் கோபுர வாயிலைக் கடந்ததும் காண இருப்பது படித்துறை விநாயகர் கோயில். இவ்விநாயகர் காவிரியின் படித்துறையில் விளங்கியவர் என்பதை

இத்தலத்து வீரசோழன் காலத்துக் கல்வெட்டால் அறியலாம். கோயிலின் உள் சந்நிதிக்குத் தென்பால் ஆண்ட விநாயகர் கோயில் அழகாக அமைக்கப் பட்டுள்ளது. பிரணவப் பிரகாரத்தின் வடக்கில் தல விருட்சமாகிய மருதமரம் உள்ளது. அதன் எதிரே திகழ்வது வேம்படிக் குமரர் கோயில், இரண்டா வது பிரகாரமாகிய கொடுமுடிப் பிரகாரத்தின் வட பால் சொக்கநாதர் கோயில் உள்ளது. மழையின்றி நாடு வாடுங்காலத்தில் இப்பெருமானுக்குச் சிறப்பாகப் பூசைசெய்து, மேகராகக் குறிஞ்சிப் பண்ணமைந்த திருமுறையினைப் பாராயணஞ்செய்வதால் உடன் மழை பொழிதலை இன்றுங்காணலாம். பெரிய பிரகாரத்தில் தெற்குக் கோபுரத்திற்கு மேல்பாலும், அம்மன் சந்நி திக்குத் தென்பாலும் மூகாம்பிகை திருக்கோயில் உள் ளது, இது ஐம்பத்திரண்டு சக்திபீடங்களுள் ஒன்ருய்த் திகழ்வது. இக்கோயிலின் கருப்பக்கிரகம் வடநாட்டுக் கோபுர அமைப்பில் சிறந்து விளங்குகிறது. இக் கோயிலுள் மேரு சக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட் டுள்ளது.

பரிவாரத் தலங்களின் சிறப்புக்கள்

பரிவாரத் தலங்கள்

அணிமருவும் இடைமருதீ சருக்கு நந்தி
ஆவடுதண் டுறைசோமாக் கந்தராரூர்
திணிபுகழா லங்குடியில் குருமூர்த்தியானைத் [வேள்
திருமுகத்தோன் வலஞ்சுழியே ரகத்திற் செவ்
கணிதருமாப் பாடியிற்சண் டீசன் தில்லை
கதிர்ப்பொதுவில நடக்கடவுள் வடுகன்காழி
பணிமருவு மாந்துறையின் இரவி யாகும்
பரமனெழிற் பதமலருக் கன்புமிக்கீர்.

திருவிடைமருதூர் மூலத்தானத் தலமாகவும் அத் தலத்தைச்சுற்றித் திருவலஞ்சுழி, சுவாமிமலை, திருவாப் பாடி, சூரியனார்கோயில், சிதம்பரம், சீகாழி, திருவா வடுதுறை, திருவாரூர், திருவாலங்குடி என்பன பரிவாரத் தலங்களாகவும் விளங்குகின்றன.

தல விசேடம்

இத்தலத்தைப்பற்றிக் கந்தபுராணம், இலிங்கபுரா ணம் பிரமகைவர்த்தம். சிவரகசியம் என்ற பழமை யான புராணங்களில் கூறப்பட்டுள்ளது. இத்தலத்தை முறைப்படி வழிபடுபவர்கள் சித்தப்பிரமை நீங்கி நலம் பெற்றுச் செல்லுதல் இன்றுங் கண்கூடு.

தீர்த்தங்கள்

இத்தலத்தில் காருணியாமிருத தீர்த்தம் முதல் கலியாணதீர்த்தம் ஈருக 32 தீர்த்தங்கள் உள்ளன. கலியாணதீர்த்தம் என்பது காவிரியின் தென்புறத்தில் இருக்கும் பூசத்துறையாகும். இத்தீர்த்தத்தில் தைப் பூசத்தன்று நீராடுவோர் சகல பாவங்களினின்றும் விடுபட்டு எல்லாவித நலன்களும்பெற்று உய்வார்கள்.

நிருவாகம

இக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்துத் திருத்தலைவராகிய 22-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் அவர் களால் சிறந்தமுறையில் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இவர்களது அருளாட்சியில் பத்து இலட்சத்திற்கு மேல் செலவிடப்பட்டு இராஜகோபுரங்கள், திருச் சுற்று மதில்கள் பிரகாரங்கள் முதலியன புதுப்பிக்கப் பட்டுள்ளன.

ஆலயத்திலுள்ள நூல்நிலையத்தில் ஆகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள் முதலிய நானூறுக்கு மேற்பட்ட சுவடிகளும், பல அரிய தமிழ் நூல்களும்சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. புதிதாகக் கட்டப்பட்ட நூல் நிலையக் கட்டிடத்தில் இவை நல்லமுறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. நூல்நிலையக் கட்டிடத்தை அடுத்துச் சமயப்பிரசார மண்டபம் அழகிய முறையில் எல்லாவசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளது. பிரசார மண்டபத்தில் சைவ சமயாசாரியார் நால்வர் திருவுருவங்களும், திருமுறைக்கோயிலும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

திருக்கோயிலும் தீர்த்தமும் சேர்ந்து கோயில் சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பு உடையதாக விளங்குகிறது. இக்கோயிலுக்குச் சொந்தமாக நஞ்சை நிலங்கள் சுமார் 1816 ஏக்கரும், புஞ்சை நிலங்கள் சுமார் 795 ஏக்கரும், மனைக்கட்டுகள் சுமார் 64 ஏக்கரும் குளங்களும் ஆக கூடுதல் 2695 ஏக்கர்கள் நஞ்சை புஞ்சை நிலங்களாக இருக்கின்றன.

கோயிலின் பூஜைமுறைச் சிறப்பு

இந்தக் கோயிலில் திருவனந்தல் முதல் ஆறுகால பூஜைகள் நாள்தோறும் சிறப்பாக நடைபெறுகின்றன. ஏகநாயகருக்குத் தனிப்பட்டமுறையில் விசேட பூஜை ஒவ்வொருநாளும் நடைபெறுகிறது. இவையேயன்றி தைப்பூசப் பெருவிழா, வைகாசி வசந்தவிழா, அறுபத்துமூவர் விழா, ஆகியவைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. பன்னிரு திருமுறைகளும் இக்கோயிலில் ஆண்டுதோறும் ஐந்து மாதங்கட்கு மேலாக முறையாகப் பாராயணஞ் செய்யப்படுகிறது. இவைகளேயன்றி ஏனைய சிறப்புக்களும் ஏற்புடைய முறையில் நடைபெற்று வருகின்றன.

கோயிலுக்கென்று சொந்தமாக 1008 சங்குகள் வாங்கப்பட்டுள்ளன. அவைகளைக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதத்து நான்கு சோம வாரங்களிலும் சிறப்பாகச் சங்காபிஷேகம் நடத்தப் பட்டு வருகின்றன. நூல் நிலையத்தில் உள்ள பழம் பெரும் நூல்களின் துணைகொண்டு பல அரிய நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன.

சரித்திரச் சிறப்புக்கள்

இத்தலத்தில் பழமையான 159 கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகளுள் ஒன்று இக்கோயிலில் நாடக சாலை இருந்ததாகக் குறிப்பிடுகிறது. நாடக ஆசிரியன் ஒருவேலி நிலம் தானம் பெற்றுள்ளதாக அந்தக் கல்வெட்டில் காணப்படுகின்றது.

தல அமைப்பு

இத்தலம் கிழக்கே பாணபுரத்தையும், தெற்கே திருநீலக் குடியையும், மேற்கே திருபுவனத்தையும் வடக்கே காவிரி ஆற்றையும் தனக்கு எல்லைகளாகக் கொண்டு நடுநாயகமாக விளங்குகின்றது.

கல்விப்பணி

நகரில் தொடக்கப்பள்ளி மூன்றும், மேல்நிலைப் பள்ளி ஒன்றும் உள்ளன. இந்தப்பள்ளிகள் திருவாவடுதுறை ஆதீன நிருவாகத்தில் அமைந்து சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றன.

வழிபட்டோர்

உரோமசமுனிவர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம். பட்டினத்தார், பத்திரகிரியார் தங்கி வழிபட்ட தலம்.

வரகுணபாண்டியர் வழிபட்டுத் தம்மைப்பற்றிய பிரமகத்தி தோடத்தினின்று நீங்கப்பெற்ற திருத்தலம்.

பட்டினத்தார் வழிபட்டது

இறைவர் குபேரனுடன் பல தலங்கட்குஞ் சென்று காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தார். குபேரன் அத்தலத்துத் தங்க விரும்பியது கண்ட இறைவர் அவரை அங்குப் பிறக்குமாறு அருள்செய்தார். குபேரன், இறைவர் கூறியருளியதைக் கேட்டுத் தம்மை ஆட்கொள்ளவேண்டும் என வேண்டிக்கொண்டான். சிவபிரானும் அவ்வாறே அருள் புரிந்து திருக்கயிலை அடைந்தார். இறைவர் கட்டளைப்படி குபேரன் அப்பட்டினத்தில் சிவநேசருக்குப் புதல்வராகத் தோன்றித் திருவெண்காடர் என்ற பெயருடன் திகழலானார்.

திருவெண்காடர் உரிய பருவம் வந்ததும் சிவகலை என்னும் நங்கையை மணந்து அவருடன் இல்லற வாழ்க்கையை நல்லற வாழ்க்கையாக நடத்தினர். அவர்களது வாழ்க்கையில் மக்கட்பேறு இல்லாதது பெருங்குறையாக இருந்தது. இருவரும் இறைவர்பால் வேண்டிக் குறையிரக்கலானார்கள்.

இவர்கள் இன்னலைப் போக்க இடைமருதீசர் எண்ணினார். இறைவர் ஒருநாள் வில்வமரத்தடியில் குழந்தை வடிவாய் எழுந்தருளினர். அக்கோயில் சிவாச்சாரியாராகிய சிவசருமர் அக்குழந்தையை எடுத்தார். மனைவி பால்கொடுத்தார். இருவரும் தங்கள் வறுமையை இந்தக் குழந்தைமூலம் போக்க மருதீசர் ஆணைப்படி குழந்தையைக் காவிரிப்பூம்பட்டினம் எடுத்துச் சென்றனர். திருவெண்காடர் அக்குழந்தையின் எடை அளவு பொன் கொடுத்து அக்குழந்தையைப் பெற்று மருதவாணர் என்று பெயர் சூட்டி அன்புடன் வளர்க்கலானார்.

மருதவாணர் ஒருநாள் பெட்டி ஒன்றை வைத்து மறைந்தார். வெண்காடர் பெட்டியைப்பார்க்க அதில் காதற்ற ஊசியும் ஓலையுமிருந்தன. உண்மையுணர்ந்து அடிகள் துறவுபூண்டுப் பல தலங்களையும் வழிபட்டுத் திருவிடைமருதூரை யடைந்து கீழைக்கோபுரவாயிலில் தங்கிச் சிவயோகத்திருந்தனர் பின வடக்குநோக்கிச் சென்றார். பத்திரகிரியார் என்ற அரசர் இவருக்குச் சீடரானார், அவருடன் மீண்டும் திருவிடைமருதூரை அடைந்தார், பத்திரகிரியார் வெண்காடரருளால் சிவஞானம் கைவரப் பெற்றுத் திருவருட் சோதியில் கலந்தார். ''கரும்பு கைக்குந்தலம் நீ அருள்பெறுந் தலம்'' என அசரீரிகூற அடிகள் வெளிப்போந்து திருவொற்றியூரை அடைந்து சிவத்துடன் கலந்தார்.

பத்திரகிரியார்

பத்திரகிரியார் உஜ்ஜயினி நாட்டு அரசர். வடக்கு நோக்கிச் சென்ற பட்டினத்தடிகள் உஜ்ஜயினி நாட்டில் உள்ள காட்டில் பிள்ளையார் கோயிலில் நிட்டைகூடி இருந்தார். அந்தச் சமயம் அரண்மனையில் கொள்ளை யிடச் சென்ற கள்ளர்கள் ''விநாயகரே! எமக்குப் பொருளகப்படின் உமக்கு முத்தாரம் சாத்துகிறோம்'' என்று கூறிச் சென்றார்கள். கள்ளர்கட்குப் பெரும் பொருள் கிடைத்தது. திரும்புங்கால் தம் வாக்குத் தவறாது முத்துமாலையை விநாயகர்மேல் எறிந்தார்கள். அம் மாலை பட்டினத்தார் கழுத்தில் விழுந்தது.

பட்டினத்தார் நிட்டை கலைந்து வெளியேவந்தார். அடிகள் கழுத்தில் முத்துமாலையைக்கண்ட காவலர்கள் அவரைக் கள்வர் என்று பற்றிச் சென்று அரசரிடம் விட்டார்கள், அரசர் அவரைக் கழுவிலேற்றுமாறு உத்தரவிட்டுத் தாமும் உடன்சென்றார். இறைவரை அடிகள் துதித்துக் கழுமரத்தை நோக்கவே கழுமரம்

எரிந்தது. அரசர் அந்த நிகழ்ச்சியைக்கண்டு அஞ்சினர், அடிகளுக்கு அடிமைபூண்டார். உடன் துறவு கொண்டு அடிகளுடன் சென்று பிச்சை எடுக்கலானர். இவருடன் சிவயோகி ஒருவர் நாயுருக்கொண்டு அலைந்தவர் தொடரலானர். பத்திரகிரியார் அந் நாய்க்கும் சோறளித்துவந்தார்.

இருவரும் திருவிடைமருதூருக்கு வந்தார்கள். இறைவர் அடியவர் உருக்கொண்டு பட்டினத்தாரிடம் வந்து பிச்சைகேட்டார். அடிகள் ''மேலைக் கோபுரத்தில் பத்திரகிரி என்ற சமுசாரி உள்ளான்; அவன்பால் செல்க'' என்ருர். இறைவரும் அவர்பால் அடிகள் சொல்லியதைத் தெரிவித்துப் பிச்சைகேட்டார். பத்திரகிரியார் 'இவ்வோடும் நாயுமல்லவோ என்னைச் சமுசாரி ஆக்கின' என்று கூறி ஓட்டை நாயின்மீது எறிந்தார். நாய் உயிர் நீங்கிக் காசிராசன் மகளாய்ப் பிறந்து வளர்ந்து பத்திரகிரியாரை அடைந்தாள். பத்திரகிரியார் அப்பெண்ணுடன் தன் குருவையடைந்து பணிந்தார். மூவரும் கோயிலினுட் செல்லவே தோன்றிய சோதியைக் கண்டு பணிந்தார்கள். பத்திரகிரியாரும் அந்தப் பெண்ணும் அச்சோதியுட் கலந்தார்கள். பட்டினத்தார் இறையருளை எண்ணி வியக்கலானர்.

தலவரலாற்றுப் படங்கள்

இத்திருக்கோயிலின் சுவாமிசந்நிதியில் விளங்கும் பெரிய நந்திக்கு மேல்பால் உள்ள இருபக்கச் சுவர்களிலும் இத்தல சம்பந்தமான புராண வரலாறுகள் படங்களாக எழுதப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

நூல்கள்

இத்தல சம்பந்தமாக இரண்டு புராணங்கள் உள்ளன. அவையேயன்றிப் பட்டினத்தார் அருளிய நூல் ஒன்றும் உண்டு.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றுலும் சிறந்து விளங்குவது இத்தலம்.

புராண வரலாறும் தல விசேடமும்

நமது நாட்டில் விளங்கும் காசி முதலிய சிறந்த தலங்களுள் திருவிடைமருதூரும் ஒன்று இத்தலம் பன்னிரண்டு திருப்பெயர்களை உடையது. இது உமையம்மையின் இருதய கமலம்போல் விளங்குவது. அர்ஜுனம் - மருதமரம். மருதமரத்தைத் தல விருட்சமாகக்கொண்ட தலங்கள் வடக்கே மல்லிகார்ஜுனமும் தெற்கே திருப்புடைமருதூர் என வழங்கும் புடார்ஜுனமும், நடுவில் இத்தலமும் விளங்குவதால் இது மத்தியார்ச்சுனம் எனவும் இடைமருது எனவும் வழங்கப்பெறும். இத்தலத்தையடைந்து வழிபட்டால் நவக்கிரக இன்னல்கள் நலிவுபெறும். பூதம், பிசாசம் பீடிக்காது. உமை பூசித்துப் பேறுபெற்ற தலம். இவ்வாறு முருகப்பெருமான் முனிவர்கட்கு இத்தலப் பெருமையைக் கூறினர்.

உமை தவஞ்செய்தல்

அகத்தியர் முனிவர்களோடு இடைமருதையடைந்தார். உமாதேவியை நினைந்து சண்பகச்சோலையில் தவஞ்செய்யத் தொடங்கினர். இறைவனது ஆணையின் வண்ணம் உமையம்மை முனிவர்கட்குக் காட்சி கொடுத்தருளினர். முனிவர்கள் முறைப்படி இறைவியை வழிபட்டு இறைவரும் காட்சி கொடுக்க அருள் செய்ய வேண்டுமென்று குறையிரந்தார்கள். உமையம்மை இறைவரை எண்ணிச் சிவோகம்பாவனையில் இருந்தார். இந்தத் திருவுருவே மூகாம்பிகை என்பது. இறைவர், தவத்திற்கு இரங்கி உமையம்மைக்கு இருதய கமலத்தும், முனிவர்கட்கு வெளிப்படையாகவும் காட்சி கொடுத்து ஏகநாயகராயினர்.

இறைவர் பூஜை

உமைக்கு வரமருளிய பின்னர் இறைவர் சோதி இலிங்கத்தைப் பூஜிக்கும் பொருட்டுச் சென்றனர். தேவர்கள் எல்லாம் பூசைப் பொருள்களை ஏந்தி நின் ருர்கள். இறைவர் முறைப்படி பூசைசெய்து தேவர் கட்கு வரம் நல்கினுர். உமை இறைவரைப் பார்த்துப் "பெருமானே! பிரமன் முதலிய தேவர்கள் உம்மைப் பூசிப்பதன்றே முறை; அவ்வாருக இந்த மூர்த்தி யிடத்து எவரைப் பூசித்தீர்'' என்று வினவினுர். அத னைக்கேட்ட இறைவன் "உமையே! பூசித்தோனும் பூசனையை ஏற்றுக்கொண்ட பரம்பொருளும் நாமே; நம்மை நாமே பூசிப்பதற்குக் காரணம் என்னையோ எனில் இம்முனிவர்கள் நம்மைப் பூசித்தலை மறந்த னர். அவர்கள் அதனை அறிந்து கோடற்பொருட்டே யாம்'' என்றனர். அன்று தொடங்கி முனிவர் முதலாயினேர் இப்பெருமானைக் காமிகாமக விதிப்படி பூசைசெய்து பேறு பெறுவாராயினர். தைப்பூச ஐந்தாந்திருவிழா வன்று தம்மைத் தாம் அருச்சித்தல் இத்தலத்தில் நடைபெறுகின்றது.

உரோமசர் அருள்பெறல்

உரோமச முனிவர் வீட்டின்பத்தை அடைய எண்ணித் தவத்தோர் பலருடன் சிவத்தல யாத்திரை சென்ருர். பல தீர்த்தங்களில் நீராடிக் காவிரியில் முழு கினுர். இடைமருதூரை அணுகினுர். அவ்வமயம் இடை மருதூரில் உள்ள கனக தீர்த்தத்திலே காகம் ஒன்று முழுகி எழுவதைக் கண்டார். எழுந்த காகம் மருத மரத்தில் உட்கார்ந்தது. தன் கரிய வடிவம் நீங்கிப் பொன்வடிவம் பெற்றது. ஆச்சரியமடைந்தது. இறைவன் அருளால் அவ்விடத்துப்பொன் விமானம்

தோன்றியது. காகம்உருத்திர வடிவம்பெற்று விமானத்தில் ஏறிக் கயிலையை அடைந்தது.

இக்காட்சியை உரோமசர்கண்டார். திருக்கோயிலை அடைந்தார், சமணம் மேலோங்கிச் சைவம் குன்றிய நிலையில் விநாயகர் இறைவரைப் பூசித்து வந்தார். உரோமசமுனிவர் விநாயகரின் அருள்பெற்று உய்ய எண்ணினர். உரோமசருக்கு அருளிய விநாயகர் ஆண்ட விநாயகர் என வழங்கப்படுபவர். உரோமசர் மருதவனத்தையே கயிலாயமாக எண்ணினர். கோயிலின் வடபால் ஒரு பர்ணசாலை ஏற்படுத்தினர். முப்போதும் காவிரியாடி சிவாகமவிதிவழுவாமல் சிறப்பாகப் பூசைசெய்து வருவாராயினர். "பெருமானே! தேவரீர் இந்தத் தலத்தில் இக்கோலத்திலேயே இருத்தல் வேண்டும். சைவநெறியும் வைதிகநெறியும் தழைத்தோங்கவேண்டும்" என்று வேண்டினர். இறைவரும் அவ்வாறே வரம்தந்து "சிலநாட்களில் சோழன் ஒருவன் வருவான்; அவன் இதனைச் சிறந்த நகரமாக்குவான்" என்று கூறியருளினர்.

அவ்வாறே சோழமன்னன் வந்து முனிவரை வணங்கினன். முனிவர் அவனுக்கு வீரசோழன் என்று பட்டம் சூட்டினர். முனிவர் சோழனை அழைத்துக் கொண்டு திருக்கோயிலை அடைந்தார். "அரசனே! நீ இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்க" என்றார் வீரசோழன் காடு கெடுத்து நாடாக்குவித்தான். நகரம் சமைத்தான். திருப்பணிகள் பலவும் செய்வித்தான். திருவிழா நடத்த எண்ணினன். முனிவரைக் கேட்டான். முனிவர் அரசனைநோக்கித் "தைமாதத்துப் பூசநாளைத் தீர்த்த நாளாகக் கொண்டு விழாச்செய்க. அப்பூசநாளும் தை மாதத்திலே வியாழக்கிழமையில் பூரணைத்திதியில் அமைந்துவருமாயின் உத்தமமாகும். அதுவும் இப்போதுள்ளது; ஆதலின் திருவிழாவைச்

சிறப்புறச்செய்க" என்றார். அரசனும் திருவிழாவைச் செய்து முத்திபெற்றான்

சுகீர்த்தி வழிபட்டது

முன்னொரு காலத்தில் காஞ்சீபுரத்தில் சுகீர்த்தி என்பவன் அரசாண்டுவந்தான் மகப்பேறுவேண்டி அகத்தியரை வழிபட்டான். அவரும் "நீ திருவிடைமருதூரை யடைந்து இறைவனை வழிபாடுசெய், புத்திரப் பேறடைவாய்" என்றார். சுகீர்த்தியும் அகத்தியரை வணங்கி விடைபெற்றான். இடைமருதை அடைந்தான். காவிரியில் படிந்தெழுந்தான். மகாலிங்கேசரை வழிபட்டான். பிதிர்க்கள் பூசையைவிதிப்படிசெய்தான. அதன் பயனாகப் புதல்வரைப்பெற்றான். கோயிலில் பல திருப்பணிகள் செய்து முடிவில் சிவபதமடைந்தான்.

காசிபர் அருள் பெறல்

காசிபர், திருமால் ஆயர் சேரியில் குழந்தையாக விளையாடிய கோலத்தைக்காண விழைந்தார். நீண்ட நாள் எண்ணியும் கிட்டவில்லை இடைமருதை அடைந்தார். தவங்கிடந்தார். இறைவரும் பாலகண்ணனுகக் காட்சி அளித்தார். முனிவர் வணங்கினார். கண்ணபிரான் அருளியபடி காசிபர் இடைமருதீசனை வழிபடலானார். பிரணவப் பிரகாரத்தில் தல விருட்சத்திற்கடியில் காசிபர் வழிபட்ட கண்ணன் இன்றும் எழுந்தருளி உள்ளார்.

இவ்வாறே வசிட்டர் முதலிய முனிவர்களும் திருவிடைமருதூரை அடைந்தார்கள் நாடோறும தவமுருது மகாலிங்கத்தைப் பூசித்து எல்லா நலங்களும் பெற்றார்கள். முருகப்பெருமானும் இறைவனைவழிபட்டு இத்தலத்தில் கயிலைக்காட்சியைக் கண்டார்

தீர்த்தச் சிறப்பு

இத்தலத்திலுள்ள காருண்யாமிருத தீர்த்தத்தில் நீராடுவோர் கங்கையாடிய பயனைக் காட்டிலும் மேலான பலனைப் பெறுவார்கள். கலியாண தீர்த்தம், ஐராவத தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் இத்தலத்தில் உள்ளன. அவைகளும, ஆடுவோர் பாவங்களைப் போக்கி நலன்கள் பலவும் வழங்குவனவாம்.

வீரசேனன் வழிபட்டது

வீரசேனன் என்பவன் பாண்டியநாட்டு மன்னன். அவன் ஒருநாள் காட்டிற்கு வேட்டையாடச்சென்றான். அவன் செலுத்திய அம்பு, குறிதவறி மறைந்திருந்த மறையவன்மேல்பாய அவனிறந்தான். அது தெரிந்து வருந்தினன் பிரமகத்தி உடனே கரிய உருவில் வந்து அவனைப்பற்றியது. பலவாறு அவனைத் துன்புறுத்தியது. அந்தத் துன்பம் நீங்கப் புண்ணிய நதிகளில் ஆட எண்ணிச் சோழநாட்டைச் சேர்ந்தான், திருவிடைமருதூரை அடைந்தான் பூசத்துறையில் ஆடி, கோயிலை யடைந்தான. மருதவாணரை வழிபட உள்ளேசென்றான். பிரமகத்தியைச் சிவகணத்தினர்கள் உள்ளே செல்லவிடாமல் கடைசெய்தார்கள். பழியும் தயங்கி வெளியேசென்றது. மன்னன் நீண்டநாள் இறைவரைவழிபட்டு முடிவில் முத்தியும்பெற்றான்.

சித்திரகீர்த்தி மகப்பேறு பெற்றது

பாண்டிய நாட்டரசன் சித்திரகீர்த்தி என்பவன் அழகே உருவான ஒரு பெண்ணை மணந்து எல்லா நலங்களும்பெற்று வாழ்ந்தான. அவள்பெயர் சுகுணை யென்பது. சுகுணை எல்லாநலங்களும் நிறையப் பெற்றும் தனக்கு மகப்பேறில்லையே என்று கவன்றாள்.

மன்னனுடன் சுகுணை சாபால முனிவரை அடைந்து வழிபட்டுக் குறையிரந்தாள். அம்முனிவர் கூறியபடி இருவரும் இடைமருதை அடைந்து இறைவனை வழி பட்டார்கள் இருவருக்கும் ஏற்ற மகவு இறைவரரு ளால் கிட்டியது. சித்திரகீர்த்தி பங்குனித் திருநாளில் திருவிழா நடத்த ஏற்பாடுசெய்து தன் நாடுமீண்டான்

சிவ வழிபாட்டுச் சிறப்பு

துங்கபத்திரையின் ஆற்றங்கரையில் சத்தகோடி சுராலயம் என்ற ஊர் இருந்தது. அவ்வூர் அந்தணன் ஒருவன் சிவபூசையைச் சிறந்த முறையில் செய்பவன், உதயத்தின்முன் மலரெடுத்து இறைவரை நாள்தோறும் பூசைசெய்வது அவ்வந்தணன் வழக்கம். சிவ பூசை செய்வோர் பழுதடைந்த மலரையோ பத்திரத்தையோ கொண்டு பூசைசெய்தல் கூடாது. ஒருநாள் கவனமின்றிப் பழுதடைந்த மலரைக்கொண்டு பூசை செய்துவிட்டான் புழுவெட்டிய பூவைச் சாத்தியதால் அவன் கண்ணொளியை இழந்தான். மனம் மிகவருந்தி வசிட்டமுனிவரை அடைந்து வேண்டினன் அவர் கூறியபடி திருவிடைமருதூரை அடைந்தான். கனக தீர்த்தத்தில் ஆடினன் மருதவாணரை வழிபட்டான். விழிபெற்றான். மேலும் மறு பிறவியில் விசுவாமித்திர முனிவராய்த் தோன்றினன் தவத்தால் பிரமனிலும் மேமபட்டவனானன். இச்சிறப்பைச் சிவபூசையினால் பெற்றான்.

வரகுணர் வழிபாடு

முன்னொரு காலத்தில் வரகுணன், பாண்டிய நாட்டை வளமுற ஆண்டான். அம்மன்னன் ஒருசமயம் வேட்டையாடக் காட்டை அடைந்தான். வேட்டை யாடித் திரும்பும்போது பொழுதுபோயிற்று. குதிரை

வேகமாக வந்தது. வருகின்ற வழியில் பிராமணன் ஒருவன் படுத்து உறங்கினன். குதிரைக்குளம்பு அவன் மார்பில் அழுந்த அவன் இறந்தான். மன்னன் அதனை அறியான். மனை புக்கான்.

பின்னர் வந்த சேனைகள் பிராமணன் இறந்ததைக் கண்டு மன்னனிடம் கூறினர்கள். அரசன் நடுங்கினன். பல தான தருமங்களைச் செய்தான்; செய்தும் பிரமகத்தி மன்னனைப் பற்றியது. தன்னைப்பற்றிய பழிதீரப் பல கழுவாய்கள் செய்தான். முறையாகக் கூடல் நாயகனை வலம் வந்தான்.

அவ்வாறு வலம் வருங்கால் ஒருநாள் அசரீரி! அரசன்கேட்க "மன்னனே! சோழ அரசன் ஒருவன் உன்னோடு போர்செய்ய வந்து போரிட்டுத் தோற்று ஓடுவான். நீயும் தொடர்ந்து அவனுடன் ஓடு. அப்பொழுது தம்மைத்தாமே அருச்சனைபுரிந்த இடைமருதை அடைவாய். அத்தலத்தை அடையுமுன்னரே இந்தப் பழி உன்னைவிட்டகலும் என்று கூறியது.

சிலநாள்கழித்துச் சோழமன்னன் வந்தான். பாண்டியனும் சோழனை எதிர்த்தான். சோழன் புறங்கொடுத்தோடினன் பாண்டியன் இறைவனுடைய அருளையெண்ணி அவனைவிரட்டித் தொடர்ந்தான். சோழ நாட்டை அடைந்தான். இடைமருதைச் சேர்ந்ததும் கோபுரத்தைக் கண்டான தேரினின்று கீழிறங்கிப் பணிந்தான வீதியை வலமாக வந்தான் பூசத்துறையதனில் நீராடினன். காருணியாமிருத தீர்த்தத்திலே முழுகினன் கீழைக் கோபுரவழியே கோயிலுட் புகுந்தான. அரசனைப்பற்றிய பழியும் ஒருபால் நின்றது. அரசன் பெருஞ்சுமை கழிந்தது போன்று எண்ணி மகிழ்ந்தான. இறைவன் "மன்னனே! நீ கீழைவாயில் வழியே செல்லாதே பழி அங்கே நின்றது. ஆகலின்

மேலே வாயிலின் வழியே செல்'' என்றருளினர். மன்னன் மகிழ்ந்தான். அம்மையையும் வழிபட்டான்.

வரகுணன் நாள்தோறும் ஆலயத்தை வலம்வந்து காலந்தவருமல் வழிபட்டான். கூடல் நாயகனுக்கு ஆலயத்தின் வடபால் கோயில் எடுத்தான். மேற்குக் கோபுரம் எடுத்தான். தவத்தால் உடல் மெலிந்தான். இறைவன் "வரகுண! கயிலையில் உள்ளபடி கொடுமுடிப்பிரகாரம் ஒன்று இங்கே அமைப்பாயாக; அந்தப் பிரகாரத்தை நீ ஒருமுறை வலம்வரின் அது நம்மை ஆயிரம்முறை வலம் வந்ததை ஒக்கும்'' என்று கூறியருளினர்

வரகுணன் இறைவர் அருளியபடி சின்னளில் கொடுமுடிப் பிரகாரத்தைச் செய்து முடித்தான். அதனை நாடோறும் வலம் வந்தான். வரகுண பாண்டியர் திருவிடைமருதூரில் தங்கியிருந்த காலத்தில் பற்பல அற்புத நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அந் நிகழ்ச்சிகள் யாவும் கோயிலின் முகப்பில் உள்ள வடபக்கச் சுவரில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுக் காட்சியளிக்கின்றன

சோழ அரசன் தன மகளை வரகுணனுக்குச் சிறப்புடன் மணம்செய்து கொடுத்தான் வரகுணன் தன் மனைவியின அழகினைக்கணடு வியந்து இவள் மருத நாயகருக்கே உரியவள் என று உறுதிபூண்டு, கோயிலை அடைந்து அப்பெண்ணை ஏற்றருள இறைவர்பால் வேண்டினர். பெருமானும் அப்பெண்ணின் வலதுகை மட்டும் வெளியில நீட்டி யிருக்கும்படி அவளைத் தன் னுட்கொண்டார். மன்னர் மகிழ்ந்து அரண்மனையடைந்தார்.

மறுநாட்காலை பூசை செய்வதற்குச் சிவாச்சாரியார் கோயிலினுள்ளே புகுந்தார். அரசரும் நுழைந்தார்.

இறைவரது முடியின்மேல் வளைக்கரம் ஒன்றை யாவரும் கண்டனர். அப்பொழுது இறைவர் அதனையும் மறைத்தருளினர். மன்னர் மகிழ்ந்தார். எல்லோரும் வியந்தனர்.

வரகுணர் பாண்டியநாடு அடைந்தார். சிவலோகத்தைக் காண விழைந்தார். அவர் விருப்பப்படி இறைவன் அவர்க்குச் சிவலோகம் காட்டியருளினர். மன்னர் கண்டு மகிழ்ந்து கயிலையை அடைந்து இன்புற்றார்.

பிரதட்சிணச் சிறப்பு

திருவிடைமருதூரிலுள்ள மருதப்பெருமானை வழிபடுவதற்குக் கோயிலையடைந்து முதல் மதிலின் உட்புறத்தில் வலம் வருதலை அசுவமேதப் பிரதட்சிணம் என்பர், இந்த அசுவமேதப் பிரதட்சிணம் செய்வோர் எல்லா நலங்களும் பெறுவர். தொடங்குங்கால் முருகப்பெருமானை வழிபட்டுத் தொடங்கவேண்டும். ஒரு மண்டலம், அரைமண்டலம் கால்மண்டலம் என்று வரையறை செய்துகொண்டு வலம்வருதல்வேண்டும். வலம் வருவதும் இருபத்துநான்கு பன்னிரண்டு, ஏழு என்ற அளவில் வரல்வேண்டும். தைமாத விழாவில் வலம் வருவோர் பெரும்பயன் பெறுவர்

இதனை அடுத்துள்ளது கொடிமுடிப் பிரகாரம். கயிலாயமலையை வலம் வருவதாலாகும் பேறு இதனால் சித்திக்கும் பிற பிரகாரங்களை வலம் வருதலாலும் சிறந்த பலன்கள் உண்டாகும்

யுவனாசுவன் பெற்றபேறு

அயோத்தி அரசன் யுவனாசுவன் என்பவன் இவனுக்கு நீண்டநாள் மகப்பேறில்லை. வசிட்டரையடைந்

தான். வசிட்டர், மன்னனைத் திருவிடைமருதூர் செல்லு மாறு பணித்தார். அங்குச் சென்று புத்திரகாமேட்டி வேள்வியைச்செய், என்றார். அரசனும் வழியிடையுள்ள பல தலங்களையும் வழிபட்டு இடைமருதை அடைந்தான் புத்திரகாமேட்டி யாகம்செய்தான். புத்திரப்பேறு கருதி வைத்துப் பூசித்த பொற்குட நீரைத் தாகமிகுதியால் குடித்தான். அவன் வயிற்றில் கருதங்கியது. பருவம் முதிர்ந்ததும் வயிற்றைக் கிழித்துக்கொண்டு புத்திரன் வெளிப்பட்டான். புண் ஆறாது வருத்தியது. முனிவர்கள் கூறியபடி அசுவமேதப் பிரதட்சிணம் வந்தான். புண்ணும் ஆறியது பின்பு இறைவரை வணங்கித் தனாடு அடைந்தான் சினாட்சென்று சிவனடி சேர்ந்தான்.

மாந்தாதாச் சிறப்பு

மாந்தாதா, யுவனாசுவன் புதல்வன். மாந்தாதாவின் சேனைகள் போரில் புறங்கொடுத்த கலிங்கனைக் கொன்றன. அப்பழி மன்னனைச் சார்ந்தது. பழிநீங்க வழி வேண்டி வசிட்டரைச் சரணடைந்தான். அவர் கூறிய படி திருவிடைமருதூர் அடைந்து அசுவமேதப் பிரதட்சிணம் வந்தான். பழி நீங்கப்பெற்றான். பல நற்பணிகள் செய்தான் இறைவனுக்குத் திருவிழாச்செய்ய எண்ணினான். வசந்தகாலம் வந்தது. பத்துநாட்கள் திருவிழாக் கொண்டாடித் தீர்த்த விழாவும் செய்வித்தான் பின்னர் இறைவர் அருள்பெற்றுத் தன்னுடைய நாட்டை அடைந்து இன்புற வாழ்ந்தான்.

வசுமன்னன் வழிபாடு

காஞ்சி மன்னன் வசுமான என்பவன் யாத்திரை கருதிக் காசியாத்திரை செய்து நாடு திரும்பினான். அதற்குள் பகைவர்கள் அவனது நாட்டைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அரசன் மனம் வருந்திச்

சாபாலி முனிவரை அடைந்தான். நாட்டைத் தான் இழந்த காரணத்தை அவரிடம் வினவினன், முனிவர் அவன் செய்த தீங்கைப் பின் வருமாறு கூறினர். "அரசனே! நீ முற்பிறப்பில் பெருஞ்செல்வன்; வணிகன்; பல பண்டங்களும் விற்கும் தொழிலுடையோன். உன் வீட்டின் பக்கத்தில் ஒரு அந்தணன இருந்தான். அந்தணன் உன்னிடம் அரிசி முதலிய பொருளை விலைக்கு வாங்குவான். மாதம் ஒருமுறை அவற்றின் மொத்தத்தொகையை உன்னிடம செலுத்தி வந்தான். நீ அவன் வாங்கும் பொருள்களின் விலையை மட்டும் எழுதிவைத்து மாதந்தோறும் அவன் கொடுக்கும் தொகையைமட்டும் எழுதாது விடுத்தனே. இவ்வாறு ஐம்பது ஆண்டுகள் ஆயின. அந்தணன் காலம் முடிந்து இறந்தான. அவன் மனைவியும் இறந்தாள். அவர்கட்கு நாலைந்து பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் சிறுவயதினர். அப்பிள்ளைகளை அரசவைக்கு இழுத்துச் சென்று வரவு இலலாத கணக்கைக் காட்டி அப்பிள்ளைகளுடைய வீடு மற்றப் பொருள்கள் எல்லாவற்றையும் கைக்கொண்டாய். அப்பாவம் இப்போது உன்பால் பலன தருவதாயிற்று. அக்காலத்துச் சிவபெருமானுக்கும் சிவனடியார்கட்கும் சல பொருள்களைக் கொடுத்தாய் அப்புண்ணியப் பயனல் இப்பிறவியில் அரசனுக இருந்து உலகை ஆட்சி புரிந்தாய். நீ அசுவமேதயாகம் புரிந்தால் பாவம் ஒழிந்து இழந்த நாட்டைப் பெறுவாய்'' என்றுர் வசுமான், ''பொருள் இல்லையே என் செய்வேன!'' என்றுன்: ''நீ திருவிடைமருதூர் அடைந்து அசுவமேதப் பிரதடசிணம் வந்தால் இப்பழி தீரும்'' என்றுர் அவ்வாறே வநது பிரதட்சிணம் செய்து இறைவரை வழிபட்டுப் பலம் பெற்றுத் தனது நாட்டை மீட்டும் வென்றுன். அவன் இறைவருக்கு மார்கழித் திருவாதிரைத் திருவிழாவைச் சிறப்புற நடாத்திவைத்தான்.

21

அஞ்சத்துவசன் அன்பு

இம்மன்னன் சோழநாட்டை, உறையூரைத் தலை நகராகக் கொண்டு ஆண்டவன். இவன் நண்பன் மித்திரன் என்பவன். மித்திரன் காசி யாத்திரை செல்ல விரும்பித் தன் மனைவியை அரசன் காவலில் விட்டுச் சென்றான்.

சில காலங்கழித்துக் கங்கையாடிய மித்திரன் தன் ஊர் திரும்பினான். இரவாகி விட்டதால் மன்னனைக் காணாது மனையாளோடு தங்கிவிட்டான், மாறுவேடத்துடன் சென்ற மன்னன் மித்திரன் வீட்டில் ஆண் குரலைக் கேட்டான், மித்திரன் குரலைத் தவறாக எண்ணி உள்ளே ஏறிக்குதித்துக் கவனியாமல் அவனை வாளால் வெட்டி வீழ்த்தினான் உண்மை உணர்ந்து வருந்தினான். பின்னர் பல தலங்களையும் வழிபட்டுத் திருவிடைமருதூரை யடைந்து தன்னைப் பற்றிய பழி நீங்கப்பெற்றுச் சிறப்படைந்தான்.

திருவிடைமருதூரைத் தேவவிரதன் என்ற கள்வன் அடைந்து தைப்பூசநாளில் வழிபட்டான். பெருமான் உமையோடு எழுந்தருளி வருவதைக் கண்டான். இறைவன் திருமேனியில் உள்ள திருவாபரணங்களைக் களவாட எண்ணி ஒரு உபாயஞ்செய்தான். அரசனை அணுகிக் கோயில் நிருவாக அதிகாரத்தைப் பெற்றான் வீதியில் ஓர் இருப்பிடம் அமைத்தான். ஆபரணங்கள் வைக்குமிடங்கள் நன்கு தெரிந்தும் களவாடச் சமயம் கிட்டவில்லை.

இந்நிலையில் அவனுக்கு வலப்பக்கத்தில் பிளவை உண்டாயிற்று. அது காரணமாக அவன் இறந்தான். முடிவில் புழுவாகப் பிறந்தான். புண்ணியர் ஒருவரது அடி பட்டு இறக்க, அவன் விண்ணுலகை அடைந்தான்.

நந்தகன் அருள்பெறல்

நந்தகன் என்பவன் ஓர் அந்தணன். அவன் எதிர்ப்படும் பெண்களை வாள்கொண்டு வெட்டி அவர்களது அணிகலன்களைக் கவர்ந்துகொள்வான். அப்பொருள்களைக் கொடுத்து ஒருவர்பின் ஒருவராக ஐந்து பெண்களை மணந்தான். அவர்களும் ஒருவர் பின் ஒருவராக இறந்தனர். இதனைக்கண்டு அவன் மனம் வெறுத்துத் திரியலானன். ஒருநாள் ஒரு பெண்ணை எதிர்ப்பட்டான். அவளை நெருங்கினன். அவள் நாணி ஒதுங்கினள். அவள் மறுத்தும் இவன் அவளை மணந்தான், ஒரு குழந்தை பிறந்தது. அவள் இறந்தாள். குழந்தையைக் கொன்ருன். அந்நிலையில் பைத்தியம் பிடித்தது. பல நாடுகள் கடந்து முடிவில் இடைமருதூரை அடைந்தான். காவிரியில் நீராடி இறைவரை வழிபட்டான். பாவம் நீங்கப்பெற்ருன்.

பூசச் சிறப்பு

உரோமச முனிவரால் தொடங்கப்பட்டது பூச விழாவாகும். உத்திரட்டாதி நட்சத்திரத்தில் கொடி ஏற்றப்படும். பத்துநாள் விழா நடைபெறும். இப் பத்துநாளும் அன்பர்கள் காவிரியில் நீராடி இறைவரை வழிபடவேண்டும். அவ்வாறு வழிபடுபவர் எல்லா நலங்களும் பெற்றுச் சிறப்படைவர்.

உணங்கல்மீன் உயிர்பெற்றது

திருச்சத்தி முற்றத்திலிருந்து பரதவன் ஒருவன் கடற்கரைக்குச் சென்ருன். அங்கு உணங்கிய மீன்களை வாங்கிப் பொதிமாட்டின்மேல் ஏற்றிவந்தான். இரவு நேரத்தில் திருவிடைமருதூரை அடைந்தவன் உருத்

திர தீர்த்தக்கரையில் தங்கினுன். உடன் வந்தோர் இவனைவிட்டு இரவே சென்றுவிட்டார்கள். பொழுது புலர்ந்ததும் துணைவரைக்காணுது மிக வருந்தினுன். இறைவர் பொதியைக்காண அவிழ்க்கச் செய்தார். உணங்கிய மீன்கள் எல்லாம் உயிர்பெற்றுக் குளத்தில் குதித்தன. உடன் உருத்திரர் வடிவங்கொண்டு தேவ லோகம் சென்றன. அக்குளம் உருத்திர தீர்த்தம் என்று பெயர் பெற்றது. அதன் கரையிலிருந்த பெருமான் ஆத்மநாதர் என்று பெயர்பெற்ருர். இந்தத் தீர்த்தமும் கோயிலும் தெற்கு வீதியின் வடபால் உள்ளன.

பொன்னுருவச்சோழன்

அப்பரதகுலச் சிறுவன் ''பெருமானே! நல்ல சுமை இல்லாவிடில் இம்மாடு துள்ளிக்கொண்டு அடங் காமற் செல்லுமே! என்செய்வேன்?'' என்ருன். மருத வாணர் சிறுவனை நோக்கி. கீழே கிடக்கின்ற செங் கற்களைப் பொறுக்கிக் கட்டிக்கொள் என்ருர். சிறு வனும் அவ்வாறே கட்டிக்கொண்டு ஊர் சென்ருன் திருவிடைமருதூரில் நடந்தவற்றைத் தாயிடங் கூறி ஞன். தாயும் சேயும் அரசனிடம் சென்று நடந்த வற்றைக் கூறினுர்கள். பொதியை அவிழ்த்து நோக்க எல்லாம் பொற் கட்டிகளாக விளங்கின. அரசன் ''பொருள் உங்களுடையதே; எடுத்துச் செல்லுங்கள்'' என்று கூறிவிட்டு இடைமருதூரை அடைந்தான். புதல்வன் வேண்டி இறைவரை வழிபட்டான். தன்னுல் செய்யப்பட்ட பொன்னுருவ மகவை இறைவர் எதிர் வைத்தான். அது இறைவர் அருளால் உயிர்பெற்றது. அக்குழந்தைக்குத் திருவடி தீட்சை செய்தார். பின்னர் அரசன் கோயிலில் பற்பல திருப்பணிகள் செய்தான். முடிவில் நற்பேறு பெற்ருன்.

சுணங்கன் கதிபெற்றது

சிவத்துரோகியான ஒருவன் பலவகையான இழி பிறவிகளை எடுத்து முடிவிலே நாய்ப்பிறவியை எடுத்தான். அந்த நாயானது பல இடங்களிலே அலைந்து திரிந்து திருவிடைமருதூரை அடைந்தது. தளர்வுற்றுச் சிவயோகி ஒருவர் உறையும் மடத்தில் களைப்பு மிகுதியால் படுத்திருந்தது, சிவயோகியின் எச்சிலை உண்டது. அப்புண்ணிய வசத்தால் காசி மன்னன் மகளாகப் பிறந்தது. அப்பெண்ணைச் சோழமன்னன் மணந்தான். சோழன் மனைவி சிலநாள் கழித்துத் திருவிடைமருதூர் இறைவரை வழிபட்டுவர எண்ணங் கொண்டாள். சிவயோகியின் மடத்தை அடைந்தாள். அவர்உண்மை உணர்ந்து இறைவர்பால் குறை இரந்தார். இறைவரும் தனது பேரொளியில் அச்சிவ யோகியையும் பெண்ணையும் சேர்த்துக்கொண்டார், அடியார் மிச்சிலின் சிறப்பு இதனுல் விளங்கும்.

திரியம்பகன் திருவருட்பேறு

திரியம்பகன் சோழநாட்டில் அந்தணர் குலத்தில் தோன்றியவன். எல்லாக் கலைகளும் கற்ற பின்னர் குருவருளைப்பெற விழைந்தான். அருளும் பெற்ருன். ஆயினும் வினைவசத்தால் உபதேசமொழியை உணர முடியாமல் மறந்தான். கழைக்கூத்தி அவ்வுபதேச மொழியைத்தான் எழுதிக்கொண்டு அழித்துவிட்டாள். அஃதுணர்ந்து அக்கூத்தியிடம் திரியம்பகன் அறிந்து கொள்ளச் சென்று, பல துன்பங்களுக்கு இலக்காஞன். முடிவில் அவள் மனமிரங்கி அவ்வுபதேச மொழியைக் கூறினுள். அவளிடம் விடைபெற்று, பல தலங்களையும் வழிபட்டுத் திருவிடைமருதூரை அடைந்து மருதீசரை வழிபட்டான், அவரருள் பெற்றுச் சிறப்படைந்தான்.

உ

சிவமயம்

ARCHIVES' LIBRARY
No. 107574
MADRAS-600 008

மருதவாணர் தோத்திரப் பதிகம்

திருவார் நினது திருநீறே
தீர்க்கு மார்க்கும் உடற்பிணியும்
கருவார் பிறந்தை யடற்பிணியும்
எனல்கண் டடைந்தேன் கருதுருவோடு
அருவார் கருணைப் பெருங்கடலே!
அடியார்க் கெய்ப்பில் வைப்பே நன்
மருவார் மலர்சார் இடைமருத
வாணா! அடியேற் கிரங்காயே. (1)

ஏழைத் திருமால் அயனாதி
இமையோர் பலரும் இறவாது
பாழைக் கருதா லாலநுகர்
பரமா பரம கருணையனே!
ஊழைப் புறங்காண் வலியர்நினை
யுணருந் திறலி னரன்றே
வாழைப் படப்பை இடமருத
வாணா! அடியேற் கிரங்காயே. (2)

Q 23 : 38 . 2 ॥ N80

ஊன மளக்குந் திறந்தொழும்பின்
ஒருப்பட் டார்பாற் சிறிதுமிலாய்!
ஞான மளக்கும் பெருநலமா
முலையோர் பாகம் நயந்தவனே!

ஏன மளக்கும் திறமரிதா
யிசைப்பார்க் கெளிதாந் திருவடியாய்
வான மளக்கும் இடைமருத
வாணு ! அடியேற் கிரங்காயே (3)

நீறு புனேவேன் ஐந்தெழுத்து
நெஞ்சங் கணிப்பேன் நின்னுமம்
பேறு பிறிதில் லெனப்புகல்வேன்
பிணிக்காட் பட்டு வருந்துவனே
சீறு பகைவர் புரம்வேவச்
சிரித்தாய் தரித்தாய் சூலமழு
மாறு வளமில் இடைமருத
வாணு ! அடியேற் கிரங்காயே. (4)

கூற்றஞ் சிதைய விறைநீண்ட
கோக னகத்தா ளாயமரர்
ஏற்றஞ் சிதைய எழுந்தவிடத்து
ஏற்றஞ் சிதைய வெடுத்தயின்ருய்
தோற்றஞ் சிதையப் பல்லுயிருந்
தொழுது போற்றித் துதிக்குமுயர்
மாற்றஞ் சிதையா இடைமருத
வாணு ! அடியேற் கிரங்காயே. (5)

ஆயா ! நினேயே சரணடைந்தார்க்
கன்றி யவ்வா றடையார்க்கு
மேயா தோநின் னருள்பெருவான்
இழிந்த களர்க்கும் பொழிதருமே
தாயாய் அளிசெய் தலேவா!முத்
தலேவேல் பரித்தா யென்ஞான்றும்
மாயா வளங்கூர் இடைமருத
வாணு ! அடியேற் கிரங்காயே. (6)

உணங்கன் மீனுக் குயிருதவி
உயர்நின் னுலகம் புகப்புரிந்தாய்
சுணங்கன் நரியா தியர்க்கரிய
தூமுத் தியீற்சார் தரல்குறித்தாய்
அணங்கல் லவர்க்கு முறல்கருதா
வண்ணு அமுதே யருட்கடலே!
வணங்கல் புரிவேன் இடைமருத
வாணு! அடியேற் கிரங்காயே. (7)

அந்தோ நினக்கு வரகுணனில்
அன்பு புரிவார் ஒருவரிலர்
முந்தோ தனையற் கருள்வதலான்
முயலும் பிறருக் கருளாயோ
நந்தோ வருநீ ரெறும்பனையு
நண்ணு நறுவா சனைப்பொதியில்
வந்தோ வரிய இடைமருத
வாணு! அடியேற் கிரங்காயே. (8)

அண்டர் பரவு நிராமயனீ
யதனுற் றரணி யெனுநாமங்
கொண்ட துனக்குத் தகுமெனவுட்
குறித்தே நின்னைச் சரணடைந்தேன்
தொண்டர் துயரஞ் சகியாத
தூயா! நேயா! தாயானுய்!
வண்டர் மலர்க்கா விடைமருத
வாணு! அடியேற் கிரங்காயே. (9)

ஆழி புடைசூ ழுலகினினை
யன்றித் தெய்வம் பிறிதுளதோ
பாழி யமைநின் னருட்ககலாப்
படரு முளதோ பனிவரைவாய்
வீழி புரையும் பெருநலமா
முலையாள் மேய விடப்பாகா!
வாழி வளஞ்சால் இடைமருத
வாணா! அடியேற் கிரங்காயே. (10)

திருச்சிற்றம்பலம்.

— திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான்
திரிசிரபுரம்
ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை.

திருவிடைமருதூர்த் திருப்பதிகங்கள்

திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்

பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

ஓடேகலன் உண்பதும் ஊரிடு பிச்சை
காடேயிட மாவது கல்லால் நிழற்கீழ்
வாடாமுலை மங்கையுந் தானும் மகிழ்ந்(து)
ஈடாவுறை கின்ற இடைமரு தீதோ 1

தடங்கொண்டதோர் தாமரைப் பொன்முடி தன்மேல்
குடங்கொண்டடி யார்குளிர் நீர்சுமந் தாட்டப்
படங்கொண்டதோர் பாம்பரை யார்த்த பரமன்
இடங்கொண்டிருந் தான்றன இடைமரு தீதோ. 2

வெண்கோவணங் கொண்டொரு வெண்டலை யேந்தி
அங்கோல்வளை யாளையொர் பாகம் அமர்ந்து
பொங்காவரு காவிரிக் கோலக் கரைமேல்
எங்கோனுறை கின்ற இடைமரு தீதோ. 3

அந்தம் அறி யாத அருங்கல முந்திக்
கந்தங்கமழ் காவிரிக் கோலக் கரைமேல்
வெந்தபொடிப் பூசிய வேத முதல்வன்
எந்தையுறை கின்ற இடைமரு தீதோ. 4

வாசங்கமழ் மாமலர்ச் சோலையில் வண்டே
தேசம்புகுந் தீண்டியொர் செம்மை யுடைத்தாய்ப்
பூசம்புகுந் தாடிப் பொலிந்தழ காய
ஈசன்உறை கின்ற இடைமரு தீதோ 5

வன்புற்றிள நாகம் அசைத்தழ காக
என்பிற்பல மாலையும் பூண்டெரு தேறி
அன்பிற்பிரி யாதவ ளோடும் உடனாய்
இன்புற்றிருந் தான்றன் இடைமரு தீதோ. 6

தேக்குந்திமி லும்பல வுஞ்சுமந் துந்திப்
போக்கிப்புறம் பூச லடிப்ப வருமால்
ஆர்க்குந்தரைக் காவிரிக் கோலக் கரைமேல்
ஏற்கஇருந் தான்றன் இடைமரு தீதோ. 7

பூவார்குழ லார் அகில் கொண்டு புகைப்ப
ஓவாதடி யாரடி யுள்குளிர்ந் தேத்த
ஆவா அரக் கன்றனை ஆற்ற லழித்த
ஏவார்சிலை யான்றன் இடைமரு தீதோ. 8

முற்றாததொர் பால்மதி சூடு முதல்வன்
நற்றாமரை யானொடு மால்நயந் தேத்தப்
பொற்றோளியுந் தானும் பொலிந்தழ காக
எற்றேயுறை கின்ற இடைமரு தீதோ. 9

சிறுதேரரும் சில்சம ணும்புறங் கூற
நெறியேபல பத்தர்கள் கைதொழு தேத்த
வெறியாவரு காவிரிக் கோலக் கரைமேல்
எறியார்மழு வாளன இடைமரு தீதோ. 10

கண்ணார்கமழ் காழியுள் ஞானசம பந்தன்
எண்ணார்புகழ் எந்தை இடைமரு தின்மேல்
பண்ணோடிசை பாடிய பத்துமவல் லார்கள்
விண்ணோருல கத்தனில் வீற்றிருப் பாரே. 11

திருச்சிற்றம்பலம்

திருவிருக்குக்குறள் : பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

தோடொர் காதினன், பாடும் மறையினன்
காடு பேணிநின், ருடும் மருதனே. 1

கருதார் புரமெய்வர், எருதே இனிதூர்வர்
மருதே யிடமாகும், விருதாம் வினைதீர்ப்பே. 2

எண்ணும் அடியார்கள், அண்ணல் மருதரைப்
பண்ணின் மொழிசொல்ல, விண்ணுந் தமதாமே. 3

விரியார் சடைமேனி, எரியார் மருதரைத்
தரியா தேத்துவார், பெரியார் உலகிலே. 4

பந்த விடையேறும், எந்தை மருதரைச்
சிந்தை செய்பவர் புந்தி நல்லரே. 5

கழலுஞ் சிலம்பார்க்கும், எழிலார் மருதரைத்
தொழலே பேணுவார்க், குழலும் வினைபோமே. 6

பிறையார் சடையண்ணல், மறையார் மருதரை
நிறையால் நினைபவர், குறையார் இன்பமே 7

எடுத்தான் புயந்தன்னை, அடுத்தார் மருதரைத்
தொடுத்தார் மலர்சூட்ட, விடுத்தார் வேட்கையே. 8

இருவர்க் கெரியாய, உருவ மருதரைப்
பரவி யேத்துவார், மருவி வாழ்வரே. 9

நின்றுண் சமணதேரர், என்றும் மருதரை
அன்றி யுரைசொல்ல, நன்று மொழியாரே. 10

கருது சம்பந்தன, மருத ரடிபாடிப்
பெரிதுந் தமிழ்சொல்லப், பொருத வினைபோமே. 11

திருச்சிற்றம்பலம்,

32

பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினொ டிறவுமானான்
அருந்தவ முனிவரொ டால்நிழற்கீழ்
இருந்தவன் வளநகர் இடைமருதே, 1

தோற்றவன் கேடவன் துணைமுலையாள்
கூற்றவன் கொல்புலித் தோலசைத்த
நீற்றவன் நிறைபுனல் நீள்சடைமேல்
ஏற்றவன் வளநகர் இடைமருதே. 2

படையுடை மழுவினன் பால்வெண்ணீற்றன்
நடைநவில் ஏற்றினன் ஞாலமெல்லாம்
முடைதலை யிடுபலி கொண்டுழல்வான்
இடைமரு தினிதுறை எம்இறையே. 3

பணைமுலை யுமையொரு பங்கனொன்னார்
துணைமதில் மூன்றையுஞ் சுடரினமூழ்கக்
கணைதுரந் தடுதிறற் காலற்செற்ற
இணையிலி வளநகர் இடைமருதே. 4

பொழிலவன் புயலவன் புயலியக்கும்
தொழிலவன துயரவன துயரகற்றும்
கழலவன கரியுரி போர்த்துகந்த
எழிலவன் வளநகர் இடைமருதே. 5

நிறையவன் புனலொடு மதியும்வைத்த
பொறையவன் புகழவன் புகழநின்ற
மறையவன் மறிகடல் நஞ்சையுண்ட
இறையவன் வளநகர் இடைமருதே 6

நனிவளர் மதியொடு நாகம்வைத்த
பனிமலர்க் கொன்றையம் படர்சடையன்
முனிவரொ டமரர்கள் முறைவணங்க
இனிதுறை வளநகர் இடைமருதே. 7

தருக்கின அரக்கன தாளுந்தோளும்
நெரித்தவன் நெடுங்கைமா மதகரிஅன்(று)
உரித்தவன் ஒன்னலர் புரங்கள்மூன்றும்
எரித்தவன் வளநகர் இடைமருதே. 8

பெரியவன் பெண்ணினொ டாணுமானான்
வரியர வணைமறி கடல்துயின்ற
கரியவன் அலரவன் காண்பரிய
எரியவன் வளநகர் இடைமருதே. 9

சிந்தையில் சமணொடு தேரர்சொன்ன
புந்தியில் உரையவை பொருள்கொளாதே
அந்தணர் ஒத்தினொ டரவம்ஓவா
எந்தைதன் வளநகர் இடைமருதே. 10

இலைமலி பொழிலிடை மருதிறையை
நலம்மிகு ஞானசம் பந்தன்சொன்ன
பலமிகு தமிழிவை பத்தும்வல்லார்
உலகுறு புகழினொ டோங்குவரே. 11

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம் : பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நடைமரு திரிபுரம் எரியுண நகைசெய்த
படைமரு தழலெழ மழுவல பகவன்
புடைமரு திளமுகில் வளம்அமர் பொதுளிய
இடைமரு தடையநம் இடர்கெடல் எளிதே. 1

மழைநுழை மதியமொ டழிதலை மடமஞ்ஞை
கழைநுழை புனல்பெய்த கமழ்சடை முடியன
குழைநுழை திகழ்செவி யழகொடு மிளிர்வதோர்
இழைநுழை புரியணல் இடம்இடை மருதே, 2

அருமையன் எளிமையன் அழல்விடம் மிடறினன்
கருமையின் ஒளிபெறு கமழ்சடை முடியன்
பெருமையன் சிறுமையன் பிணைபெணொ டொருமையின்
இருமையும் உடையணல் இடம்இடை மருதே. 3

பொரிபடு முதுகுற முளிகளி புடைபுல்க
நரிவளர் சுடலையுள் நடமென நவில்வோன்
வரிவளர் குளிர்மதி யொளிபெற மிளிர்வதோர்
எரிவளர் சடையணல் இடம்இடை மருதே. 4

வருநல மயிலன மடநடை மலைமகள்
பெருநல முலையிணை பிணைசெய்த பெருமான்
செருநல மதிலெய்த சிவனுறை செழுநகர்
இருநல புகழ்மல்கும் இடமஇடை மருதே. 5

கலையுடை விரிதுகில் கமழ்குழல் அகில்புகை
மலையுடை மடமகள் தனையிடம் உடையோன
விலையுடை அணிகலன் இலனென மழுவினோ(டு)
இலையுடை படையவன் இடம்இடை மருதே. 6

வளமென வளர்வன வரிமுரல் பறவைகள்
இளமணல் அணைகரை யிசைசெயும் இடைமரு(து)
உளமென நினைபவர் ஒலிகழல் இணையடி
குளமண லுறமூழ்கி வழிபடல் குணமே. 7

மறையவன் உலகவன் மாயவன் மதிபுல்கு
துறையவன் எனவல அடியவர் துயரிலர்
கறையவன் மிடறது கனல்செய்த கமழ்சடை
இறையவன் உறைதரும இடமஇடை மருதே. 8

மருதிடை நடவிய மணிவணர் பிரமரும்
இருதுடை யகலமொ டிகலின ரினதெனக்
கருதிடல் அரியதோர் உருவொடு பெரியதோர்
எருதுடை அடிகள்தம் இடம்இடை மருதே. 9

துவருறு விரிதுகில் உடையரும் அமணரும்
அவருறு சிறுசொலை நயவன்மின் இடுமணல்
கவருறு புனல்இடை மருதுகை தொழுதெழும்
அவருறு வினைகெடல் அணுகுதல் குணமே. 10

தடமலி புகலியர் தமிழ்கெழு விரகினன்
இடமலி பொழில்இடை மருதினை இசைசெய்த
படமலி தமிழிவை பரவவல் லவர்வினை
கெடமலி புகழொடு கிளரொளி யினரே. 11

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம் : பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

விரிதரு புலியுரி விரவிய அரையினர்
திரிதரும் எயிலவை புனைகணை யினிலெய்த
எரிதரு சடையினர் இடைமரு தடைவுனல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. 1

மறிதிரை படுகடல் விடமடை மிடறினர்
எறிதிரை கரைபொரும் இடைமரு தெனுமவர்
செறிதிரை நரையொடு செலவிலர் உலகினில்
பிறிதிரை பெறும்உடல் பெறுகுவ தரிதே. 2

சலசல சொரிபுனல் சடையினர் மலைமகள்
நிலவிய வுடலினர் நிறைமறை மொழியினர்
இலரென இடுபலி யவர்இடை மருதினை
வலமிட வுடல்நலி விலதுள வினையே. 3

விடையினர் வெளியதொர் தலைகல னெனநனி
கடைகடை தொறுபலி யிடுகென முடுகுவர்
இடைவிட லரியவர் இடைமரு தெனும்நகர்
உடையவ ரடியிணை தொழுவதெம் உயர்வே. 4

உரையரும் உருவினர் உணர்வரு வகையினர்
அரைபொரு புலியதள் உடையினர் அதன்மிசை
இரைமரும் அரவினர் இடைமரு தெனவுளம்
உரைகள துடையவர் புகழ்மிக வுளதே. 5

ஒழுகிய புனல்மதி அரவமொ டுறைதரும்
அழகிய முடியுடை அடிகள தறைகழல்
எழிலினர் உறைஇடை மருதினை மலர்கொடு
தொழுதல்செய் தெழுமவர் துயருறல் இலரே. 6

கலைமலி விரலினர் கடியதொர் மழுவொடும்
நிலையினர் சலமகள் உலவிய சடையினர்
மலைமகள் முலையிணை மருவிய வடிவினர்
இலைமலி படையவர் இடம்இடை மருதே. 7

செருவடை யிலவல செயல்செயத் திறலொடும்
அருவரை யினிலொரு பதுமுடி நெரிதர
இருவகை விரனிறி யவரிடை மருதது
பரவுவர் அருவினை யொருவுதல் பெரிதே 8

அரியொடு மலரவன் எனஇவ ரடிமுடி
தெரிவகை அரியவர் திருவடி தொழுதெழ
எரிதரும் உருவர்தம் இடைமரு தடைவுறல்
புரிதரு மன்னவர் புகழ்மிக வுளதே. 9

குடைமயி லினதழை மருவிய வுருவினர்
உடைமரு துவரினர் பலசொல வுறநிலை
அடைமரு தருவினர் தொழுதெழு கழலவர்
இடைமரு தெனமனம் நினைவதும் எழிலே 10

பொருகட லடைதரு புகலியர் தமிழொடு
விரகினன் விரிதரு பொழிலிடை மருதினைப்
பரவிய ஒருபது பயிலவல் லவரிடர்
விரவிலர் வினையொடு வியனுல குறவே. 11

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பொங்குநூல் மார்பினீர் பூதப்படையீர் பூங்கங்கை
தங்குசெஞ் சடையினீர் சாமவேதம் ஓதினீர் [மருதில்
எங்குமெழிலார் மறையொர்கள் முறையாலேத்த இடை
மங்குல்தோய் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. 1

நீரார்ந்த செஞ்சடையீர் நெற்றித்திருக்கண்
[நிகழ்வித்தீர்
போரார்ந்த வெண்மழுவொன் றுடையீர் பூதம்பாடலீர்
ஏரார்ந்த மேகலையாள் பாகங்கொண்டீர் இடைமருதில்
சீரார்ந்த கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே 2

அழல்மல்கும் அங்கையி லேந்திப்பூதம் அவைபாடச்
சுழல்மல்கும் ஆடலீர் சுடுகாடல்லாற் கருதாதீர் [தில்
எழில்மல்கு நான்மறையோர் முறையாலேத்த இடைமரு
பொழில்மல்கு கோயிலே கோயிலாகப் பொலிந்தீரே 3

பொல்லாப் படுதலையொன் றேந்திப்புறங் காட்டாடலீர்
வில்லாற் புரமூன்றும் எரித்தீர்விடை யார்கொடியினீர்
எல்லாக் கணங்களும் முறையாலேத்த இடைமருதில்
செல்வாய கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே 4

வருந்திய மாதவத்தோர் வானோரேனோர் வந்தீண்டிப்
பொருந்திய தைப்பூச மாடியுலகம் பொலிவெய்தத்
திருந்திய நான்மறையோர் சீராலேத்த இடைமருதில்
பொருந்திய கோயிலே கோயிலாகப் புக்கீரே. 5

சலம்மல்கு செஞ்சடையீர் சாந்தம்நீறு பூசினீர்
வலம்மல்கு வெண்மழுவோன் றேந்திமயானத் தாடலீர்
இலமல்கு நான்மறையோ ரினிதாயேத்த இடைமருதில்
புலம்மல்கு கோயிலே கோயிலாகப் பொலிந்தீரே. 6

புனம்மல்கு கொன்றையீர் புலியினதளீர் பொலிவார்ந்த
சினம்மல்கு மால்விடையீர் செய்யீர்கரிய கண்டத்தீர்
இனம்மல்கு நான்மறையோ ரேத்துஞ்சீர்கொள்
[இடைமருதில்
கனம்மல்கு கோயிலே கோயிலாகக் கலந்தீரே. 7

சிலையுய்த்த வெங்கணையாற் புரமூன்றெரித்தீர்
[திறலரக்கன்
தலைபத்துந் திண்தோளும் நெரித்தீர் தையல்பாகத்தீர்
இலைமொய்த்த தண்பொழிலும் வயலுஞ்சூழ்ந்த
[இடைமருதில்
நலமொய்த்த கோயிலே கோயிலாக நயந்தீரே. 8

மறைமல்கு நான்முகனும் மாலும் அறியா வண்ணத்தீர்
கறைமல்கு கண்டத்தீர் கபாலமேந்து கையினீர்
அறைமல்கு வண்டினங்கள் ஆலுஞ்சோலை
[இடைமருதில்
நிறைமல்கு கோயிலே கோயிலாக நிகழ்ந்தீரே. 9

சின்போர்வைச் சாக்கியரும் மாசுசேருஞ் சமணரும்
துன்பாய கட்டுரைகள் சொல்லி அல்லல் தூற்றவே
இன்பாய அந்தணர்கள் ஏத்தும் ஏர்கொளிடைமருதில்
அன்பாய கோயிலே கோயிலாக அமர்ந்தீரே. 10

கல்லின் மணிமாடக் கழுமலத்தார் காவலவன்
நல்ல அருமறையான் நற்றமிழ் ஞானசம்பந்தன்
எல்லி இடைமருதில் ஏத்துபாட லிவைபத்தும்
சொல்லு வார்க்குங் கேட்பார்க்குந் துயரமில்லையே. 11

திருச்சிற்றம்பலம்.

திருக்ஷேத்திரக்கோவை : பண் - இந்தளம்

மனவஞ்சர் மற்றோட முன்மாத ராரும்
மதிகூர் திருக்கூட லில் ஆல வாயும்
இனவஞ் சொலிலா இடைமா மருதும்
இரும்பைப் பதிமாகாளம் வெற்றியூரும்
கனமஞ் சினமால் விடையான் விரும்புங்
கருகாவூர் நல்லூர்பெரும் புலியூர்
தனமென் சொலிற்றஞ்ச மென்றே நினைமின்
தவமாம் மலமா யினதா னறுமே.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்

திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

காடுடைச் சுடலை நீற்றர் கையில்வெண் தலையர் தையல்
பாடுடைப் பூதஞ் சூழப் பரமனார் மருத வைப்பில்
தோடுடைக் கைதை யோடுஞ் சூழ்கிடங் கதனைச் சூழ்ந்த
ஏடுடைக் கமல வேலி இடைமரு திடங்கொண் டாரே, 1

முந்தையார் முந்தி யுள்ளார் மூவர்க்கு முதல்வ ரானார்
சந்தியார் சந்தி யுள்ளார் தவநெறி தரித்து நின்றார்
சிந்தையார் சிந்தை யுள்ளார் சிவநெறியனைத்து மானார்
எந்தையார் எம்பிரானார் இடைமரு திடங்கொண் டாரே

காருடைக் கொன்றை மாலைக் கதிர்மணி அரவி னோடு
நீருடைச் சடையுள் வைத்த நீதியார் நீதி யாய
போருடை விடையொன் றேற வல்லவர் பொன்னித்
[தென்பால்
ஏருடைக் கமலமோங்கும் இடைமருதிடங்கொண்டாரே

விண்ணினார் விண்ணின் மிக்கார் வேதங்கள்
நான்கும் அங்கம்
பண்ணினார் பண்ணின்மிக்க பாடலார் பாவந் தீர்க்குங்
கண்ணினார் கண்ணின் மிக்க நுதலினார் காமற் காய்ந்த
எண்ணினார் எண்ணின் மிக்கார் இடைமரு
திடங்கொண் டாரே. 4

வேதங்கள் நான்குங் கொண்டு விண்ணவர் பரவி ஏத்
பூதங்கள் பாடியாட லுடையவன் புனிதன் எந்தை [தப்
பாதங்கள் பரவி நின்ற பத்தர்கள் தங்கள் மேலை
ஏதங்கள் தீர நின்றார் இடைமரு திடங்கொண்டாரே. 5

பொறியர வரையி லார்த்துப் பூதங்கள் பலவுஞ் சூழ
முறிதரு வன்னி கொன்றை முதிர்சடை மூழ்க வைத்து
மறிதரு கங்கை தங்க வைத்தவர் எத்தி சையும்
எறிதரு புனல்கொள் வேலி இடைமரு திடங்கொண்
[டாரே. 6

படரொளி சடையி னுள்ளாற் பாய்புனல் அரவி னோடு
சுடரொளி மதியம்வைத்துத் தூளொளி தோன் றும் எந்தை
அடரொளி விடையொன் றேற வல்லவர் அன்பர்
[தங்கள்
இடரவை கெடவு நின்றார் இடைமரு திடங்கொண்
டாரே. 7

கமழ்தரு சடையி னுள்ளாற் கடும்புனல் அரவி னோடுந்
தவழ்தரு மதியம் வைத்துத் தன்னடி பலரும் ஏத்த
மழுவது வலங்கை யேந்தி மாதொரு பாக மாகி
எழில்தரு பொழில்கள் சூழ்ந்த இடைமரு திடங்கொண்
[டாரே. 8

பொன்திகழ் கொன்றைமாலை புதுப்புனல் வன்னி
[மத்தம்
மின்திகழ் சடையில் வைத்து மேதகத் தோன்று கின்ற
அன்றவர் அளக்க லாகா அனலெரி யாகி நீண்டார்
இன்றுட னுலகமேத்த இடைமரு திடங்கொண் டாரே.

மலையுடன் விரவி நின்று மதியிலா அரக்கன் நூக்கத்
தலையுட னடர்த்து மீண்டே தலைவனு யருள்கள் நல்கிச்
சிலையுடை மலையை வாங்கித் திரிபுர மூன்றும் எய்தார்
இலையுடைக் கமல வேலி இடைமரு திடங்கொண்
டாரே. 10

திருச்சிற்றம்பலம்.

42

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பாச மொன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈசன் எம்பெரு மான்இடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே. 1

மறையின் நாண்மலர் கொண்டடி வானவர்
முறையி னல்முனி கள்வழி பாடுசெய்
இறைவன் எம்பெரு மான்இடை மருதினில்
உறையும் ஈசனை உள்குமென் உள்ளமே. 2

கொன்றை மாலையுங் கூவிள மத்தமும்
சென்று சேரத் திகழ்சடை வைத்தவன்
என்றும் எந்தை பிரான்இடை மருதினை
நன்று கைதொழு வார்வினை நாசமே. 3

இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேற்பிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளும் இடைமரு தன்கழல்
செம்மை யேதொழு வார்வினை சிந்துமே. 4

வண்ட லைந்தன வன்னியுங் கொன்றையும்
கொண்ட ணிந்த சடைமுடிக் கூத்தனர்
எண்டி சைக்கும் இடைமரு தாளன
விண்டு போயறும் மேலை வினைகளே. 5

ஏற தேறும் இடைமரு தீசனர்
கூறு வார்வினை தீர்க்குங் குழகனர்
ஆறு செஞ்சடை வைத்த அழகனர்க்(கு)
ஊறி யூறி உருகுமென் உள்ளமே, 6

விண்ணு ளாரும் விரும்பப் படுபவர்
மண்ணு ளாரும் மதிக்கப் படுபவர்
எண்ணி ளுர்பொழில் சூழிடை மருதினை
நண்ணி ளுரைநண் ணுவினை நாசமே. 7

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தனுர்
கந்த மாலைகள் சூடுங் கருத்தனுர்
எந்தை யென்னிடை மருதினில் ஈசனைச்
சிந்தை யால்நினை வார்வினை தேயுமே. 8

வேத மோதும் விரிசடை அண்ணலார்
பூதம் பாடநின் ருடும் புனிதனுர்
ஏதந் தீர்க்கும் இடைமரு தாஎன்று
பாதம் ஏத்தப் பறையும்நம் பாவமே. 9

கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே. 10

முற்றி லாமதி சூடும் முதல்வனுர்
ஒற்றி னுர்மலை யாலரக் கன்முடி
எற்றி னுர்கொடி யார்இடை மருதினைப்
பற்றி னுரைப் பற்ருவினைப் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பறையின் ஓசையும் பாடலின் ஓசையும்
மறையின் ஓசையும் வைகும் வயலெலாம்
இறைவன் எங்கள் பிரான்இடை மருதினில்
உறையும் ஈசனை உள்குமென் உள்ளமே, 1

மனத்துள் மாயனை மாசறு சோதியைப்
புனிற்றுப் பிள்ளைவெள் ளைம்மதி சூடியை
எனக்குத் தாயைஎம் மான்இடை மருதனை
நினைத்திட் டூறி நிறைந்ததென் உள்ளமே. 2

வண்ட ணைந்தன வன்னியும் மத்தமும்
கொண்ட ணிந்த சடைமுடிக் கூத்தனை
எண்டி சைக்கும் இடைமரு தாஎன
விண்டு போயறும் மேலை வினைகளே. 3

துணையி லாமையில் தூங்கிருட் பேய்களோ(டு)
அணைய லாவ தெமக்கரி தேயெனு
இணையி லாஇடை மாமரு தில்லெழு
பணையி லாகமஞ் சொல்லுந்தன் பாங்கிக்கே. 4

மண்ணை யுண்டமால் காணான் மலரடி
விண்ணை விண்டயன் காணான் வியன்முடி
மொண்ணை மாமரு தாஎன்றென் மொய்குழல்
பண்ணை யாயமுந் தானும் பயிலுமே 5

மங்கை காணக் கொடார்மண மாலையைக்
கங்கை காணக் கொடார்முடிக் கண்ணியை
நங்கை மீர்இடை மருதர்இந் நங்கைக்கே
எங்கு வாங்கிக் கொடுத்தார் இதழியே. 6-11

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

சூலப் படையுடையார் தாமே போலும்
சுடர்த்திங்கட் கண்ணி யுடையார் போலும்
மாலை மகிழ்ந்தொருபால் வைத்தார் போலும்
மந்திரமுந் தந்திரமு மானார் போலும்
வேலைக் கடல்நஞ்ச முண்டார் போலும்
மேல்வினைகள் தீர்க்கும் விகிர்தர் போலும்
ஏலக் கமழ்குழலாள் பாகர்போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 1

காரார் கமழ்கொன்றைக் கண்ணி போலும்
காரானை யீருரிவை போர்த்தார் போலும்
பாரார் பரவப் படுவார் போலும்
பத்துப்பல் லூழி பரந்தார் போலும்
சீரால் வணங்கப் படுவார் போலும்
திசையனைத்து மாய்மற்று மானார் போலும்
ஏரார் கமழ்குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய ஈசனாரே. 2

வேதங்கள் வேள்வி பயந்தார் போலும்
விண்ணுலகு மண்ணுலகு மானார் போலும்
பூதங்க ளாய புராணர் போலும்
புகழ வளரொளியாய் நின்றார் போலும்
பாதம் பரவப் படுவார் போலும்
பத்தர்களுக் கின்பம் பயந்தார் போலும்
ஏதங்க ளான கடிவார் போலும்
இடைமருது மேவிய ஈசனாரே. 3

திண்குணத்தார் தேவர் கணங்க ளேத்தித்
திசைவணங்குச் சேவடியை வைத்தார் போலும்
விண்குணத்தார் வேள்வி சிதைய நூறி
வியன்கொண்டல் மேற்செல் விகிர்தர் போலும்
பண்குணத்தார் பாடலோ டாட லோவாப்
பரங்குன்றம் மேய பரமர் போலும்
எண்குணத்தா ரெண்ணா யிரவர் போலும்
இடைமருது மேவிய ஈசனாரே 4

ஊகமுகிலுரிஞ்சு சோலை சூழ்ந்த
உயர்பொழி லண்ணாவி லுறைகின் றாரும்
பாகம் பணிமொழியாள் பங்க ராகிப்
படுவெண் தலையிற் பலிகொள் வாரும்

மாகமடை மும்மதிலு மெய்தார் தாமும்
அணிபொழில் சூழ் ஆரூ ருறைகின் ருரும்
ஏகம்பம் மேயாரு மெல்லா மாவார்
இடைமருது மேவிய ஈச ஞரே. 5

ஐயிரண்டு மாருென்று மாஞர் போலும்
அறுமூன்று நான்மூன்று மாஞர் போலும்
செய்வினைகள் நல்வினைக ளாஞர் போலும்
திசையனைத்து மாய்நிறைந்த செல்வர் போலும்
கொய்மலரங் கொன்றைச் சடையார் போலும்
கூத்தாட வல்ல குழகர் போலும்
எய்யவந்த காமனையுங் காய்ந்தார் போலும்
இடைமருது மேவிய ஈச ஞரே. 6

பிரியாத குணமுயிர்கட் கஞ்சோ டஞ்சாய்ப்
பிரிவுடைய குணம்பேசிற் பத்தோ டொன்ருய்
விரியாத குணமொருகால் நான்கே யென்பர்
விரிவிலாக் குணநாட்டத் தாறே யென்பர்
தெரிவாய குணமஞ்சுஞ் சமிதை யஞ்சும்
பதமஞ்சுங் கதியஞ்சுஞ் செப்பி ஞரும்
எரியாய தாமரைமே லியங்கி ஞரும்
இடைமருது மேவிய ஈச ஞரே. 7

தோலிற் பொலிந்த வுடையார் போலும்
சுடர்வா யரவசைத்த சோதி போலும்
ஆலம் அமுதாக வுண்டார் போலும
அடியார்கட் காரமுத மாஞர் போலும்
காலனையும் காய்ந்த கழலார் போலும்
கயிலாயந் தம்மிடமாக் கொண்டார் போலும்
ஏலங் கமழ் குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய ஈச ஞரே. 8

பைந்தளிர்க் கொன்றையந் தாரார் போலும்
படைக்கணாள் பாக முடையார் போலும்
அந்திவாய் வண்ணத் தழகர் போலும்
மணி நீல கண்ட முடையார் போலும்
வந்த வரவுஞ் செலவும் ஆகி
மாறாதென் னுள்ளத் திருந்தார் போலும்
எந்தம் மிடர்தீர்க்க வல்லார் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 9

கொன்றையங் கூவிள மாலை தன்னைக்
குளிர்சடைமேல் வைத்துகந்த கொள்கை யாரும்
நின்ற அனங்கனை நீறு நோக்கி
நெருப்புருவமாய் நின்ற நிமல னாரும்
அன்ற வரக்கன அலறி வீழ
அருவரையைக் காலா லழுத்தி னாரும்
என்று மிடுபிச்சை யேற்றுண் பாரும்
இடைமருது மேவிய ஈச னாரே. 10

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

ஆறு சடைக்கணிவர் அங்கைத் தீயர்
அழகர் படையுடையர் அம்பொற் றோள்மேல்
நீறு தடவந் தடப மேறி
நித்தம் பலிகொள்வர் மொய்த்த பூதம
கூறுங் குண புடையர் கோவ ணத்தர்
கோடால வேடத்தர் கொள்கை சொல்லின்
ஈறு நடுவு முதலு மாவார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே 1

மங்குன் மதிவைப்பர் வான நாடர்
மடமா னிடமுடையர் மாத ராளைப்
பங்கின் மிகவைப்பர் பால்போல் நீற்றர்
பளிக்கு வடம்புனைவர் பாவ நாசர்
சங்கு திரையுகளுஞ் சாய்க்கா டாள்வர்
சரிதை பலவுடையர் தன்மை சொல்லின்
எங்கும் பலிதிரிவர் என்னுள் நீங்கார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 2

ஆல நிழலிருப்பர் ஆகா யத்தர்
அருவரையி னுச்சியர் ஆணர் பெண்ணர்
காலம் பலகழித்தார் கறைசேர் கண்டர்
கருத்துக்குச் சேயார்தாங் காணு தார்க்குக்
கோலம் பலவுடையர் கொல்லை யேற்றர்
கொடுமழுவர் கோழம்பம் மேய வீசர்
ஏல மணநாறு மீங்கோய் நீங்கார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 3

தேசர் திறம்நினைவார் சிந்தை சேருஞ்
செல்வர் திருவாரூ ரென்றும் உள்ளார்
வாச மலரின்கண் மான்தோல் போர்ப்பர்
மருவுங் கரியுரியர் வஞ்சக் கள்வர்
நேசர் அடைந்தார்க் கடை யாதார்க்கு
நிட்டுரவர் கட்டங்கர் நினைவார்க் கென்றும்
ஈசர் புனற்பொன்னித் தீர்த்தர் வாய்த்த
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 4

கரப்பர் கரியமனக் கள்வர்க் குள்ளங்
கரவாதே தந்நினைய கிற்பார் பாவம்
துரப்பர் தொடுகடலின் நஞ்ச முண்பர்
தூய மறைமொழியர் தீயா லொட்டி

நிரப்பர் புரமூன்றும் நீறு செய்வர்
நீள்சடையர் பாய்விடைகொண் டெங்கும் ஐயம்
இரப்பர் எமையாள்வர் என்னுள் நீங்கார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 5

கொடியார் இடபத்கர் கூத்து மாடிக்
குளிர்கொன்றை மேல்வைப்பர் கோல மார்ந்த
பொடியாரு மேனியர் பூதிப் பையர்
புலித்தோலர் பொங்கரவர் பூண நூலர்
அடியார் குடியாவர் அந்த ணாளர்
ஆகுதியின் மந்திரத்தார் அமரர் போற்ற
இடியார் களிற்றுரியர் எவரும் போற்ற
இடைமருது மேவி யிடங்கொண் டாரே 6

பச்சை நிறமுடையர் பாலர் சாலப்
பழையர் பிழையெலாம் நீக்கி யாள்வர்
கச்சைக் கதநாகம் பூண்ட தோளர்
கலனென்று கையேந்தி இல்லந் தோறும்
பிச்சை கொளநுகர்வர் பெரியர் சாலப்
பிறங்கு சடைமுடியர் பேணுந் தொண்டர்
இச்சை மிக அறிவர் என்று முள்ளார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 7

காவார் சடைமுடியர் காரோ ணத்தர்
கயிலாயம் மன்னினர் பன்னு மின்சொல்
பாவார் பொருளாளர் வாளார் கண்ணி
பயிலுந் திருவுருவம் பாகம் மேயார்
பூவார் புனலணவு புன்கூர் வாழ்வர்
புரமூன்றும் ஒள்ளழலாக் காயத் தொட்ட
ஏவார் சிலைமலையர் எங்குந் தாமே
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 8

புரிந்தார் நடத்தின்கட் பூத நாதர்
பொழிலாரூர் புக்குறைவர் போந்து தம்மில்
பிரிந்தா ரகல்வாய பேயுந் தாமும்
பிரியா ரொருநாளும் பேணு காட்டில்
எரிந்தா ரனலுகப்பர் ஏழி லோசை
எவ்விடத்துந் தாமேயென் றேத்து வார்பால்
இருந்தார் இமையவர்கள் போற்ற என்றும்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 9

விட்டிலங்கு மாமழுவர் வேலை நஞ்சர்
விடங்கர் விரிபுனல்சூழ் வெண்காட் டுள்ளார்
மட்டிலங்கு தார்மாலை மார்பில் நீற்றர்
மழபாடி யுள்ளுறைவர் மாகா ளத்தர்
சிட்டிலங்கு வல்லரக்கர் கோனை யன்று
செழுமுடியுந் தோளைந்நான் கடரக் காலால்
இட்டிரங்கி மற்றவனுக் கீந்தார் வென்றி
இடைமருது மேவி யிடங்கொண் டாரே 10

திருச்சிற்றம்பலம்,

இடைமருதைப்பற்றிய ஏனைய பாசுரங்கள்

திருச்சிற்றம்பலம்

தீர்த்தப் புனற்கெடில விரட்டமுந்
திருக்கோவல் வீரட்டம் வெண்ணெய் நல்லூர்
ஆர்த்தருவி வீழ்சுனைநீர் அண்ணுமலை
அறையணி நலலூரும் அரநெறியும்
ஏத்துமின்கள் நீரேத்த நின்ற ஈசன்
இடைமரு தின்னம்பர் ஏகம்பமும்
கார்த்தயங்கு சோலைக் கயிலாயமும்
கண்ணுதலான தன்னுடைய காப்புக்களே. 1

பொழிலானைப் பொழிலாரும் புன்கூ ரானைப்
        புறம்பயனை அறம்புரிந்த புகலூ ரானை
எழிலானை இடைமருதி னிடங்கொண் டானை
        ஈங்கோய்நீங் காதுறையும் இறைவன் தன்னை
அழலாடு மேனியனை அன்று சென்றக்
        குன்றெடுத்த அரக்கன்தோள் நெரிய வூன்றுங்
கழலானைக் கற்குடியில் விழுமி யானைக்
        கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 2

நசையானை நால்வேதத் தப்பா லானை
        நல்குரவுந் தீப்பிணிநோய் காப்பான் தன்னை
இசையானை யெண்ணிறந்த குணத்தான் தன்னை
        இடைமருதும் ஈங்கோயும் நீங்கா தேற்றின்
மிசையானை விரிகடலும் மண்ணும் விண்ணும்
        மிகுதீயும் புனலெறிகாற் றாகி யெட்டுத்
திசையானைத் திருவானைக் காவு ளானைச்
        செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே 3

அழித்தவன்காண் எயில்மூன்றும் அயில்வா யம்பால்
        ஐயாறும் இடைமருதும் ஆள்வான் தான்காண்
பழித்தவன்காண் அடையாரை அடைவார் தங்கள்
        பற்றவன்காண் புற்றரவ நாணி னான்காண்
சுழித்தவன்காண் முடிக்கங்கை முடியே போற்றுந்
        தூயமா முனிவர்க்காய்ப் பார்மேல் நிற்க
இழித்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
        ஏகம்பன் காண் அவனென் எண்ணத் தானே 4

இடைமருதீங் கோயி ராமேச் சுரம்
        இன்னம்பர் ஏரிடவை ஏமப் பேறூர்
சடைமுடி சாலைக் குடி தக்களூர்
        தலையாலங் காடு தலைச்சங் காடு

கொடுமுடி குற்ருலங் கொள்ளம் பூதூர்
கோத்திட்டை கோட்டாறு கோட்டுக் காடு
கடைமுடி கானூர் கடம்பந்துறை
கயிலாய நாதனையே காண லாமே. 5

இணையொருவர் தாமல்லால் யாரு மில்லார்
இடைமருதோ டேகம்பத் தென்றும் நீங்கார்
அணைவரியர் யாவர்க்கும் ஆதி தேவர்
அருமந்த நன்மையெலா மடியார்க் கீவர்
தணல்முழுகு பொடியாடுஞ் செக்கர் மேனித்
தத்துவனைச் சாந்தகிலி னளறு தோய்ந்த
பணைமுலையாள் பாகனைஎம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 6

படமூக்கப் பாம்பணையா னேடு வானேன்
பங்கயனென் றங்கவரைப் படைத்துக் கொண்டார்
குடமூக்கிற் கீழ்க்கோட்டங் கோயில் கொண்டார்
கூற்றுதைத்தோர் வேதியனை உய்யக் கொண்டார்
நெடுமூக்கிற் கரியினுரி மூடிக் கொண்டார்
நினையாத பாவிகளை நீங்கக் கொண்டார்
இடமாக்கி இடைமருதுங் கொண்டார் பண்டே
என்னை இந்நாள் ஆட்கொண்ட இறைவர் தாமே.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

கழுதை குங்குமந் தான்சுமந் தெய்த்தாற்
கைப்பர் பாழ்புக மற்றது போலப்
பழுது நான்உழன் றுட்டடு மாறிப்
படுசு ழித்தலைப் பட்டனன் எந்தாய்
அழுது நீயிருந் தென்செய்தி மனனே
அங்க ணாஅர னேஎன மாட்டா
இழுதை யேனுக்கோர் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே. 1

நரைப்பு மூப்பொடு பிணிவரும் இன்னே
நன்றி யில்வினை யேதுணிந் தெய்த்தேன்
அரைத்த மஞ்சள தாவதை அறிந்தேன்
அஞ்சி னேன்நம னாரவர் தம்மை
உரைப்பன் நான்உன சேவடி சேர
உணரும் வாழ்க்கையை ஒன்றறி யாத
இரைப்பனே னுக்கோர் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே. 2

புன்னு னைப்பனி வெங்கதிர் கண்டாற்
போலும் வாழ்க்கை பொருள்இலை நாளும்
என்னெ னக்கினி இற்றைக்கு நாளை
என்றி ருந்திடர் உற்றனன் எந்தாய்
முன்ன மேஉன சேவடி சேரா
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
இன்னம் என்றனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே. 3

முந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
சிந்தித் தேமனம் வைக்கவும் மாட்டேன்
சிறுச்சிறி தேஇரப் பார்கட்கொன் றீயேன்
அந்தி வெண்பிறை சூடும்எம் மானே
ஆரூர் மேவிய அமரர்கள் தலைவா
எந்தை நீஎனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே. 4

அழிப்பர் ஐவர் புரவுடை யார்கள்
ஐவ ரும்புர வாசற ஆண்டு
கழித்துக் காற்பெய்து போயின பின்னைக்
கடைமு றைஉனக் கேபொறை ஆனேன்
விழித்துக் கண்டனன் மெய்ப்பொருள் தன்னை
வேண்டேன் மானுட வாழ்க்கையீ தாகில்
இழித்தேன் என்றனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே. 5

குற்றந் தன்னொடு குணம்பல பெருக்கிக்
கோல நுண்ணிடை யாரொடு மயங்கிக்
கற்றி லேன்கலை கள்பல ஞானங்
கடிய வாயின கொடுமைகள் செய்தேன்
பற்ற லாவதோர் பற்றுமற றில்லேன்
பாவி யேன்பல பாவங்கள் செய்தேன்
எற்று ளேன்எனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே. 6

கொடுக்க கிற்றிலேன் ஒண்பொருள் தன்னைக்
குற்றஞ் செற்றம் இவைமுத லாக
விடுக்க கிற்றிலேன் வேட்கையுஞ் சினமும்
வேண்டில் ஐம்புலன் என்வசம் அல்ல

நடுக்கம் உற்றதோர் மூப்புவந் தெய்த
    நமன்ற மர்நர கத்திடல் அஞ்சி
இடுக்கண் உற்றனன் உய்வகை அருளாய்
    இடைம ருதுறை எந்தைபி ரானே. 7

ஐவ கைய ரையர வராகி
    ஆட்சி கொண்டொரு காலவர் நீங்கார்
அவ்வ கையவர் வேண்டுவ தானல்
    அவர வர்வழி ஒழுகிநான் வந்து
செய்வ கைஅறி யேன்சிவ லோகா
    தீவ ணாசிவ னேஎரி யாடீ
எவ்வ கைஎனக் குய்வகை அருளாய்
    இடைம ருதுறை எந்தைபி ரானே. 8

ஏழை மானுட இன்பினை நோக்கி
    இளைய வர்வலைப் பட்டிருந் தின்னம்
வாழை தான்பழுக் குந்நமக் கென்று
    வஞ்ச வல்வினை யுள்வலைப் பட்டுக்
கூழை மாந்தர் தஞ் செல்கதிப் பக்கம்
    போக மும்பொருள் ஒன்றறி யாத
ஏழை யேனுக்கோர் உய்வகை அருளாய்
    இடைம ருதுறை எந்தைபி ரானே. 9

அரைக்குஞ் சந்தனத் தோடகில் உந்தி
    ஐவ னஞ்சுமந் தார்த்திரு பாலும்
இரைக்குங் காவிரித் தென்கரை தன்மேல்
    இடைம ருதுறை எந்தை பிரானை
உரைக்கும் ஊரன் ஒளிதிகழ் மாலை
    உள்ளத் தால்உகந் தேத்தவல் லார்கள்
நரைப்பு மூப்பொடு நடலையும் இன்றி
    நாதன் சேவடி நண்ணுவர் தாமே. 10

திருச்சிற்றம்பலம்.

திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

கீர்த்தித் திருவகவல்

"இடைமரு ததனில் ஈண்ட இருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசும்."

போற்றித் திருவகவல்

"இடைமரு துறையும் எந்தாய் போற்றி"

திருப்பூவல்லி

எந்தையெந் தாய்சுற்ற மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தமறுத் தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த [பிரான்
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ.

திருவேசறவு

மருவினிய மலர்ப்பாதம் மனத்தில் வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறு மிகஅலறிச் சிவபெருமான் என்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமாறு
அருளெனக்கிங் கிடைமருதே யிடங்கொண்ட
[அம்மானே.

திருப்பொன்னூசல்

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்தங்கு தேவர்களும் காணா மலரடிகள்
தேன்தங்கித் தித்தித்து அமுதூறித் தான்தெளிந்தங்கு
ஊன்தங்கி நின்றுருக்கும் உத்தரகோசமங்கைக்
கோன்றங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூசல் ஆடாமோ.

திருக்கோவையார்

குன்றங் கிடையுங் கடந்(து) உமர்
கூறும் நிதிகொணர்ந்து
மின்றங் கிடை நும்மை யும்வந்து
மேவுவன் அம்பலஞ்சேர்
மன்றங் கிடைமரு(து) ஏகம்பம்
வாஞ்சியம் அன்னபொன்னைச்
சென்றங் கிடைகொண்டு வாடா
வகைசெப்பு தேமொழியே.

திருச்சிற்றம்பலம்.

உ

கருவூர்த்தேவர் திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம

வெய்யசெஞ் சோதி மண்டலம் பொலிய
வீங்கிருள் நடுநல்யா மத்தோர்
பையசெம் பாந்தள் பருமணி யுமிழ்ந்து
பாவியேன் காதல்செய் காதில்
ஐயசெம் பொற்றோட் டவிர்சடை மொழுப்பி
னழிவழ கியதிரு நீற்று
மையசெங் கண்டத் தண்டவா ணவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. 1

இந்திர லோக முழுவதும் பணிகேட்(டு)
இணையடி தொழுதெழத் தாம்போய்
ஐந்தலை நாக மேகலை யரையா
அகந்தொறும் பலிதிரி யடிகள்
தந்திரி வீணை கீதமும் பாடச்
சாதிகின் னரங்கலந் தொலிப்ப
மந்திர கீதந் தீங்குழ லெங்கும்
மருவிடந் திருவிடை மருதே. 2

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன
பல்லவம் வல்லியொன் றிங்ஙன்
வினைபடு கனகம் போலயா வையுமாய்
வீங்குல கொழிவற நிறைந்து
துனிபடு கலவி மலைமக ளுடனாய்த்
தூங்கிருள் நடுநல்யா மத்தென்
மனனிடை யணுகி நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. 3

அணியுமிழ் சோதி மணியினுள் கலந்தாங்(கு)
அடியனே னுள்கலந் தடியேன்
பணிமகிழ்ந் தருளு மரிவைபா கத்தன்
படர்சடை விடமிடற் றடிகள்
துணியுமி ழாடை யரையிலோ ராடை
சுடருமிழ் தரவத னருகே
மணியுமிழ் நாக மணியுமிழ்ந் திமைப்ப
மருவிடந் திருவிடை மருதே. 4

பந்தமும் பிரிவுந் தெரிபொருட் பனுவற்
படிவழி சென்றுசென் றேறிச்
சிந்தையுந் தானுங் கலந்ததோர் கலவி
தெரியினுந் தெரிவுரு வண்ணம்
எந்தையுந் தாயும் யானுமென் றிங்ஙன்
எண்ணிில்பல் லூழிக ளுடனாய்
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. 5

எரிதரு கரிகாட் டிடுபிண நிணமுண்(டு)
ஏப்பமிட் டிலங்கெயிற் றழல்வாய்த்
துருகழல் நெடும்பேய்க் கணமெழுந் தாடுந்
தூங்கிருள் நடுநல்யா மத்தே

அருள்புரி முறுவல் முகிழ்நிலா வெறிப்ப
அந்திபோன் றொளிர்திரு மேனி
வரியர வாட வாடுமெம் பெருமான்
மருவிடந் திருவிடை மருதே. 6

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பி
னின்றுளி படநனை ந்துருகி
அழலையாழ் புருவம் புனலொடுங் கிடந்தாங்
காதனேன் மாதரார் கலவித்
தொழிலையாழ் நெஞ்ச மிடர்படா வண்ணந்
தூங்கிருள் நடுநல்யா மத்தோர்
மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. 7

வையவாம் பெற்றம் பெற்றமே றுடையார்
மாதவர் காதல்வைத் தென்னை
வெய்யவாஞ் செந்தீப் பட்டவிட் டிகைபோல்
விழுமியோன் முன்புபின் பென்கோ
நொய்யவா றென்ன வந்துள்வீற் றிருந்த
நூறுநூ றுயிர கோடி
மையவாங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. 8

கலங்கலம் பொய்கைப் புனல்தெளி விடத்துக்
கலந்தமண் ணிடைக்கிடந் தாங்கு
நலங்கலந் தடியேன் சிந்தையுட் புகுந்த
நம்பனே வம்பனே னுடைய
புலங்கலந் தவனே யென்றுநின் றுருகிப்
புலம்புவா ரவம்புகா ரருவி
மலங்கலங் கண்ணிற் கண்மணி யனையான்
மருவிடந் திருவிடை மருதே. 9

ஒருங்கிருங் கண்ணி னெண்ணில்புன் மாக்கள்
உறங்கிருள் நடுநல்யா மத்தோர்
கருங்கணின் றிமைக்குஞ் செழுஞ்சுடர் விளக்கங்
கலந்தெனக் கலந்துணர் கருவூர்
தருங்கரும் பனைய தீந்தமிழ் மாலை
தடம்பொழில் மருதயா ழுதிப்ப
வருங்கருங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே.

திருச்சிற்றம்பலம்.

சேந்தனார் திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டில் சிதையும் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதம் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார்பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழறஉழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்.

திருமூலர் திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள்அறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியன் நல் லன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே

திருச்சிற்றம்பலம்.

பதினொராந்திருமுறை

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

திருச்சிற்றம்பலம்

பொருளும் குலனும் புகழும் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும் – ஒருவர்
கருதா என்பார்க்கும் கறைமிடற்ருய் தொல்லை
மருதாஎன் பார்க்கு வரும.

ஓராதே அஞ்செழுத்தும் உன்ருதே பச்சிலையும்
நேராதே நீரும் நிரப்பாதே – யாராயோ
எண்ணுவார் உள்ளத் தடைமருதர் பொற்பாதம்
நண்ணுவாம் என்னுமது நாம்.

வளையார் பசியின் வருந்தார்
பிணியின் மதனன் அம்புக்(கு)
இளையார் தனங்கண்(டு) இரங்கிநில்
லார்இப் பிறப்பினில் வந்(து)

அளையார் நரகினுக்(கு) என்கட
வார்பொன் னலர்ந்தகொன்றைத்
தளையார் இடைமரு தன்னடி
யாரடி சார்ந்தவரே.

சிவபெருமான் திருவந்தாதி

நீயேயா ளாவாயும் நின்மலற்கு நன்னெஞ்சே
நீயேயா ளாவாயும் நீள்வாளின்—நீயே
ஏறூர் புனற்சடையா எங்கள் இடைமருதா
ஏறூர் புனற்சடையா என்று.

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணம்

திருஞானசம்பந்தர் தேவாரம்

ஓங்குதிருப் பதிகம் ஓடேகலன்என் றெடுத்தருளித்
தாங்கரிய பெருமகிழ்ச்சி தலைசிறக்குந் தன்மையினுல்
ஈங்கெனையா ளுடையபிரான் இடைமரு தீதோஎன்று
பாங்குடைய இன்னிசையால் பாடிஎழுந் தருளினர்.

அடியவர்கள் எதிர்கொள்ள எழுந்தருளி அங்கணைந்து
முடிவில்பரம் பொருளானர் முதற்கோயில் முன்
[னிறைஞ்சிப்
படியில்வலங் கொண்டுதிரு முன்பெய்திப் பார்மீது
நெடிதுபணிந் தெழுந்தன்பு நிறைகண்ணீர் நிரந்
[திழிய.

பரவுறுசெந் தமிழ்ப்பதிகம பாடி அமர்ந்தப்பதியில்
விரவுவார் திருப்பதிகம பலபாடி வெண்மதியோ(டு)
அரவுசடைக் கணிந்தவர்தந் தாள்போற்றி ஆர்வத்தால்
உரவுதிருத் தொண்டருடன் பணிந்தேத்தி உறையு
[நாள்

திருச்சிற்றம்பலம்

அருணகிரிநாதர் திருப்புகழ்

பரமசுகம் அருளுக

தனதனன தனதனன தனதனன தனதனன
தான தானனு தான தானனு தனதன தனதான

அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெரியதொரு
ஆக மாகியோர் பால ரூபமாய்
அருமதலை குதலைமொழி தனிலுருகி அவருடைய
ஆயி தாதையார் மாய மோகமாய்
அருமையினி லருமையிட மொளுமொளென உடல்
ஆளு மேளமாய் வால ரூபமாய் [வளர
அவரொரு பெரியோராய்

அழகுபெறு நடையடைய கிறுதுபடு மொழிபழகி
ஆவி யாயவோர் தேவி மாருமாய்
விழுசுவரை அரிவையர்கள் படுகுழியை நிலைமையென
வீடு வாசலாய் மாட கூடமாய்
அணுவளவு தவிடுமிக பிதிரவிட மனமிறுகி
ஆசை யாளராய் ஊசி வாசியாய்
அவியுறு சுடர்போலே

வெறுமிடிய னெருதவசி அமுதுபடை எனுமளவில்
மேலை வீடுகேள் கீழை வீடுகேள்
திடுதிடென நுழைவதன்முன் எதிர்முடுகியவர்களொடு
சீறி ஞாளிபோல் ஏறி வீழ்வதாய்
விரகினொடு வருபொருள்கள் சுவறியிட மொழியுமொரு
வீணி யார்சொலே மேல தாயிட
விதிதனை நினையாதே

மினுகுமினு கெனுமுடல மறமுறுகி நெகிழ்வுறவும்
வீணர் சேவையே பூணு பாவியாய்
மறுமையுள தெனுமவரை விடும்விழலை யதனின்வரு
வார்கள் போகுவார் காணு மோஎனு
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
மேள மேசொலாய் ஆளி வாயராய்
மிடையுற வருநாளில்

வறுமைகளும் முடுகிவர உறுபொருளும் நழுவசில
வாத மூதுகா மாலை சோகைநோய்
பெருவயிறு வயிறுவலி படுவன்வர் இருவிழிகள்
பீளை சாறிடா ஈளை மேலிடா
வழவழென உமிழுமது கொழகொழென ஒழுகிவிழ
வாடி ஊனெலாம் நாடி பேதமாய்
மனையவள் மனம்வேறாய்

மறுகமனை யுறுமவர்கள் நணுகுநணு கெனுமளவில்
மாதர் சீயெனு வாலர் சீயெனு
கனவுதனில் இரதமொடு குதிரைவர நெடியசுடு
காடு வாவெனு வீடு போவெனு
வலதழிய விரகழிய உரைகுழறி விழிசொருகி
வாயு மேலிடா ஆவி போகுநாள்
மனிதர்கள் பலபேச

இறுதியதொ டறுதியென உறவின்முறை கதறியழ
ஏழை மாதராள் மோதி மேல்விழா
எனதுடமை எனதடிமை எனுமறிவு சிறிதுமற
மொலேலெனு வாயை ஆவெனு

இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு தவிலறைய
ஈம தேசமே பேய்கள் சூழ்வதாய்
எரிதனில் இடும்வாழ்வே

இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதுவும்
ஏசி டார்களோ பாச நாசனே
இருவினைமு மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயும் நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையருள் இடைமருதில்
ஏக நாயகா லோக நாயகா
இமையவர் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்.

கவிபாடி வழிபட அருளுக

தனன தனதனன தான தானதன
தனன தனதனன தான தானதன
தனன தனதனன தான தானதன தத்ததான

இலகு குழைகிழிய வூடு போயுலவி
அடர வருமதன னூல ளாவியெதிர்
இளைஞ ருயிர்கவர ஆசை நேர்வலைபொ திந்தநீலம்

இனிமை கரைபுரள வாகு லாவுசரி
நெறிவு கலகலென வாசம் வீசுகுழல்
இருளின் முகநிலவு கூர மாணுடைய கன்றுபோக

மலையு மிதழ்பருகி வேடை தீரவுடல்
இறுக இறுகியநு ராக போகமிக
வளரு மிளகுதன பாரமீதினில்மு யங்குவேனே

மதுர கவியடைவு பாடி வீடறிவு
முதிர அரியதமி ழோசை யாகவொளி
வசன முடையவழி பாடுசேருமருள் தந்திடாதோ

கலக அசுரர்கிளை மாள மேருகிரி
தவிடு படவுதிர வோல வாரியலை
கதற வரியரவம் வாய்வி டாபசித ணிந்தபோகக்

கலப மயிலின்மிசை யேறி வேதநெறி
பரவு மமரர்குடி யேற நாளும்வினை
கடிய கொடியவினை வீழ வேலைவிட
வந்தவாழ்வே

அலகை யுடனடம தாடு தாதைசெவி
நிறைய மவுனவுரை யாடு நீபஎழில்
அடவி தனிலுறையும் வேடர் பேதையைம
ணந்தகோவே

அமணர் கழுவில்வினை யாட வாதுபடை
கருது குமரகுரு நாத நீதியுள
தருளும் இடைமருதில் மேவு மாமுனிவர்
தம்பிரானே.

திருச்சிற்றம்பலம்.

தவநெறி அருளுக

தனனதன தனனதன தந்தனந் தந்தனந்
தனனதன தனனதன தந்தனந் தந்தனந்
தனனதன தனனதன தந்தனந் தந்தனந் தந்ததான

படியையள விடுநெடிய கொண்டலுஞ் சண்டனும்
தமரசது மறையமரர் சங்கமுஞ் சம்புவும்
பரவரிய நிருபன்விர கன்சுடுஞ் சம்பனன்
செம்பொன்மேனிப்

பரமனெழில் புனையுமர வங்களுங் கங்கையுந்
திருவளரு முளரியொடு திங்களுங் கொன்றையும்
பரியகுமி ழறுகுகன தும்பையுஞ் செம்பையுந்
துன்றுமூலச்

சடைமுடியி லணியுநல சங்கரன் கும்பிடுங்
குமரனறு முகவன்மது ரந்தருஞ் செஞ்சொலன்
சரவணையில் வருமுதலி கொந்தகன் கந்தனென்
றுய்ந்துபாடித்

தணியவொலி புகலும்வித மொன்றிலுஞ் சென்றிலன்
பகிரவொரு தினையளவு பண்புகொண் டண்டிலன்
தவநெறியி லொழுகிவழி பண்படுங் கங்கணஞ்
சிந்தியாதோ

கடுகுபொடி தவிடுபட மந்திரந் தந்திரம்
பயிலவரு நிருதருட லம்பிளந் தம்பரங்
கதறிவெகு குருதிநதி பொங்கிடுஞ் சம்ப்ரமங்
கண்டுசேரக்

கழுகுநரி கொடிகருட னங்கெழுந் தெங்குநின்
றலகைபல திமிலைகொடு தந்தனந் தந்தனங்
கருதியிசை பொசியுநசை கண்டுகண் டின்புறுந்
துங்கவேலா

அடல்புனையும் இடைமருதில் வந்திணங் குங்குணம்
பெரியகுரு பரகுமர சிந்துரஞ் சென்றடங்
கடவிதனி லுறைகுமரி சந்திலங் குந்தனந்
தங்குமார்பா

அருணமணி வெயிலிலகு தண்டையம் பங்கயங்
கருணைபொழி வனகழலி லந்தமுந் தம்பமென்
றழகுபெற நெறிவருடி யண்டருந் தொண்டுறுந்
தம்பிரானே.

திருச்சிற்றம்பலம்.

சிவஞானம் அருளுக

தனதனதன தான தானன
தனதனதன தான தானன
தனதனதன தான தானன தந்ததான

புழுகொடுபனி நீர்ச வாதுடன்
இருகரமிகு மார்பி லேபன
புளகிதஅபி ராம பூஷித கொங்கையாலே

பொதுவினில்விலை கூறு மாதர்கள்
மணியணிகுழை மீது தாவடி
பொருவனகணை போல்வி லோசன வந்தியாலே

மெழுகெனவுரு காவ ணுர்தம
　　இதயகலக மோடு மோகன
　　வெகுவிதபரி தாப வாதனை　　கொண்டுநாயேன்

மிடை படுமல மாயை யால்மிக
　　கலவியஅறி வேக சாமிநின்
　　விதரணசிவ ஞான போதகம்　　வந்துதாராய்

எழுகிரிநிலை யோட வாரிதி
　　மொகுமொகுவென வீச மேதினி
　　இடர்கெடஅசு ரேசர் சேனைமு　　றிந்துபோக

இமையவர்சிறை மீள நாய்நரி
　　கழு தகள்கக ராசன் மேலிட
　　ரணமுககண பூத சேனைகள்　　நின்றுலாவச்

செழுமதகரி நீல கோமள
　　அபிநவமயி லேறு சேவக
　　செயசெயமுரு காகு காவளர்　　கந்தவேளே

திரைபொருகரை மோது காவிரி
　　வருபுனல்வயல் வாவி சூழ்தரு
　　திருவிடைமரு தூரில் மேவிய　　தம்பிரானே.

திருச்சிற்றம்பலம்.

க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்

திருவலஞ் சுழியைங்க ரத்தனு லயமெனத்
திருவேர கப்பதியெனும்
திருநகர முன்பொனு லயமெனச் சேய்ஞலூர்
திகழ்தண்டி யாலயமென
மருவுமா வடுதுறைவன் விடையினு லயமென்ன
வந்தசூ ரியனுலயம்
மகிழ்சூரி யன்கோயி லாமெனச் சீகாழி
வடுகனு லயமாமெனப்
பெருகுசிற் சபைசபா பதியினு லயமெனப்
பேசுதிரு வாரூர்நகர்
பெரியநா யகர்கோயி லென்னவா னோர்களும்
பேணுமிவை மத்தியாகத்
தருமருத வனமகா லிங்கநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே
தந்தைவெண் காடர்புக ழெந்தைமுரு கேசனே
சப்பாணி கொட்டியருளே.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

ஸ்ரீ ஏகநாயகரூசல்

சீர்பூத்த நான்மறையா கமங்கள் வாழத்
திருநந்தி கணங்களென் றுஞ் செழித்து வாழத்
தார்பூத்த சித்தாந்த சைவம் வாழத்
தமிழ்மறையு மைந்தெழுத்துந் தழைத்து வாழப்
பேர்பூத்த மறையவரோ டடியார் வாழப்
பெரும்பொன்னித் திருநாடு பிறங்கி வாழ
ஆர்பூத்த விடைமருதங் கோயி லாக்கொண்
டமரேக நாயகரே யாடி ரூசல். 1

மாமேவு புகழ்வீர சோழ னுற்று
மணிமதில்சூழ் திருக்கோயி லிடையின் மேவும்
தூமேவு மலங்கார மண்ட பத்திற்
றுலங்குமணிப் பொன்னூச லிலங்க மேவிப்
பூமேவு பெருநலமா முலையா ளோடும்
பொன்னனையை மேனியினீ ராடி ரூசல்
தேமேவு மருட்கட லே யாடி ரூசல்
திருவிடைமா மருதுடையீ ராடி ரூசல். 2

தளம்பூத்த நறுங்கொன்றைத் தாம மாடத்
தடந்திரைமந் தாகினியாந் தையலாடக்
குளம்பூத்த விழியாடக் குழைக ளாடக்
குலவுமணிப் பூம்பணிகள் குலவி யாட
வளம்பூத்த பல்லுயிரும் வருந்தா தீன்ற
வளர்த்தருளுந் தாய்மருங்கின் மகிழ்வுற் றூட
உளம்பூத்த விடைமருத ராடி ரூசல்
உவந்தேக நாயகரே யாடி ரூசல். 3

இந்திரனுஞ் சசியுமொரு வடந்தொட் டாட்ட
இந்திரையு முகுந்தனுமோர் வடந்தொட் டாட்டச்
சந்திரனேர் தவளசரோ ருகத்து மேய
தையலுநான் முகனுமொரு வடந்தொட் டாட்ட
அந்தரநாட் டவர்களொடு மரம்பை மாரும்
அகமகிழ்ந்து போற்றியொரு வடந்தொட் டாட்ட
மந்திரமா விடைமருதங் கொண்டு வாழும்
மகாலிங்க நாயகரே யாடி ரூசல். 4

ஒருஞானப் பாலருந்தி யம்பொற் றாளம்
ஒண்டரளச் சிவிகைபந்த ருவந்து பெற்றார்
தருஞானத் தைப்பூசங் காண்பா யென்று
தவளவெண்பைப் பெண்ணுக்கித் தந்த வெங்கோன்
திருஞான சம்பந்தச் செல்வ ரோதுஞ்
செந்தமிழ்மா மறையன்பர் தெரிந்து பாட
அருஞானத் திருவுருவி ராடி ரூசல்
அருண்மருத வாணரே யாடி ரூசல். 5

புடைமருதப் பெருந்துறையி லருள்பெற் றென்றும்
பூசையறு காலத்தும் வழாமலாற்றி
இடைமருதா நந்தத்தே னென்றே யன்பின்
ஏத்துபிரா னருளூச லடியார் பாட
அடைமருதக் கிளிமொழியோ டாடி ரூசல்
அனைத்துயிரும் புரந்தருள்வீ ராடி ரூசல்
இடைமருத நாயகரே யாடி ரூசல்
ஏகநா யகப்பெருமா னாடி ரூசல். 6

அரசரெலா மடிவணங்க மதுரை காத்த
அண்ணல்வர குணதேவற் கச்ச நீங்க
விரசுபழி யோட்டியர லோகங் காட்டு
மேன்மைதனை மெய்யன்பர் வியந்து பாடப்

பிரசமலர்த் தொடையசைய வாடி ரூசல்
பிறையணிந்த செஞ்சடையீ ராடி ரூசல்
இரசதவெண் கிரியுடையீ ராடி ரூசல்
இடைமருத வாணரே யாடி ரூசல். 7

தேனாடு நறுங்கொன்றைத் தொடைய லாடத்
தெளிபுனற்கங் காநதியின் றிரைக ளாட
மானாடத் திருக்கரத்து மழுவு மாட
மாரனிளந் தென்றலந்தேர் மருவி யாட
வானாட மண்ணாட வனைத்து மின்ப
வாரிபடிந் தாடவுமை மருங்கின் மேவித்
தானாடத் தருமமெலாந் தழைவற் றூடத்
தயங்குமிடை மருதரே யாடி ரூசல். 8

வரையரையன் மேனையொடு மகிழ்ந்து காண
வரைந்தாடுந் திருவூச லாட்டுங் கூடல்
அரையன்மலே யத்துவசன் மனைவி காண
அன்றாடுந் திருவூச லாட்டுங் காணப்
புரையுடையேங் கண்டுய்ய வாடி ரூசல்
புண்ணியவென் விடையுடையீ ராடி ரூசல்
தரைசெய்தவப் பயனாய மருத நீழல்
தங்கியருள் செல்வரே யாடி ரூசல். 9

பொருவிடைவா கனமுடையீ ராடி ரூசல்
பொங்கரவப் பூணுடையீ ராடி ரூசல்
கருவிடையாம் புகுந்தூச லாடா வண்ணங்
காத்தருளும் பெருமானே யாடி ரூசல்
வருவிடையர் குலந்தழைப்ப வருமா னையர்
வடித்தவிசை கொளுஞ்செவியீ ராடி ரூசல்
திருவிடை மா மருதுடையீ ராடி ரூசல்
தேவாதி தேவரே யாடி ரூசல். 10

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

ஸ்ரீ ஏகநாயகர் தாலாட்டு

சீர்மலிந்த கல்வியொடு செல்வமுமேன் மேல்வயங்கி
ஏர்மலிந்த மாட விடைமருத நாயகரோ. 1

எல்லாத் தலத்து மிடைமருதே மேலாமென்
றெல்லா மளித்தாட் கியம்பியருண் மாமணியோ. 2

வாய்ந்த கயிலை வடிவா மருதநிழல்
ஏய்ந்த வுமையோ டெழுந்தருளி வாழரசோ. 3

மாகா ரிருளினிடை வந்தே யுருத்திரர்கள்
ஏகா தசரு மிறைஞ்சவெளிப் பட்டவரோ. 4

மாதுமையாள் பன்னாட்செய் மாதவங்கண் டன்னாள்
[முன்
சோதிமகா லிங்கமாய்த் தோன்றியருள் சின்மயரோ. 5

கோனேயென் பார்தெளிந்து கொண்டாடு மாறு
[தன்னைத்
தானே யருச்சித்த தண்கருணை வாரிதியோ. 6

காக மொருதடத்தின் கட்படிய மற்றதன்றன்
ஆகம் பசும்பொன்னா வாக்கியரு ளாரமுதோ. 7

பணவரவம் பூணும் பரனேயென் றுண்ட
கணபதிபூ சிக்கக் கவினு முதற்பொருளோ. 8

மாட்சி யுரோமசன்றன் மாதவங்கண் டன்னையொடு
காட்சிகொடுத் தன்னான் கவலை கடிந்தவரோ. 9

இலங்கு குறுமுனிவ னென்றுவரு மென்று
நலங்கொ ளவன்வரவை நாடியுறை நாயகமோ. 10

மண்ணைக் கொடேலென்று மாவலிக்குச் சொற்ற
[வன்றன்
கண்ணைக் கொடுத்தவனைக் காத்தருளுங் கற்பகமோ. 11

இன்பகற்று பாவத் திடைப்பட்டோர் மூழ்கினவர்
துன்பகற்று பூசத் துறையாடுஞ் சுந்தரமோ. 12

சீமான் வரகுணப்பேர்த் தென்னவன்றன் காதலியைக்
கோமானீ கொள்ளெனவே கொண்டகுணக்
[குன்றமோ. 13

அல்லார் களத்தா யருளென்பார் காதலித்த
எல்லா மருளு மிடைமருத மார்கரும்போ. 14

தேனோ சுவையமுதோ தித்திக்குஞ் செய்யகனி
தானோ மலைபயந்த தையலா ளாருயிரோ, 15

பிரமகத்தி முன்னும் பெரும்பாவ நீக்கி
வரமளித்து மன்னுயிரை வாழச்செய் மாமணியோ. 16

பிணிக்கோதில் பூம்புகார்ப் பிள்ளையார் சொன்மும்
மணிக்கோவை கொண்டு மனமகிழ்ந்த வள்ளலோ. 17

வயமேவச் சூழ்வோர்கள் வைக்குமடி யொன்றற்
கயமேதப் பேறருளு மாரருட்சிந் தாமணியோ. 18

தெய்வமில்லை யென்னுஞ் சிதடர்கட வாய்மூடச்
செய்வரத னாகியநந் தெய்வ சிகாமணியோ. 19

நீதஞ்ச மென்றவர்க்கா நீடுகம லைத்தெருவிற்
பாதஞ் சிவக்கப் பரவைமனை சென்றவரோ. 20

விண்ணவரும் பாதலத்தின் மேயவரு மெண்டிசையின்
கண்ணவரு நந்தவத்தைக் காதலிக்க வந்தவரோ. 21

காவணங் காட்டுங் கடிமனையிற் சுந்தரரை
ஆவணங் காட்டி யடிமைகொண்ட வந்தணரோ. 22

திருந்தடியைப் போற்றி செயுஞ் செல்வரைமுன் கோலக்
குருந்தடியி லாண்ட குரவர் சிகாமணியோ 23

நந்தா வுலக நடுங்கா வணஞ்சடையில்
மந்தா கினியை மணந்தமண வாளரோ. 24

மன்னுயிர்கள் யாவும் வயங்குவனா மென்பதைமுன்
தென்னன் பிரம்படியாற் றேற்றுவித்த மெய்ப்
[பொருளோ. 25

கானந் தனில்விசயன் காண்டீபத் தாலடியுண்
டூனந் தவிர்படையொன் றீந்தருளு மெம்மானோ. 26

துங்கத் தமிழ்மொழியின் றூய்மையெவ ரும்மறியச்
சங்கப் புலவரிடைத் தங்கியரு ளுவலரோ 27

செயிரா வனவனைத்துந் தீர்த்தருளும் பொன்னி
அயிரா வணத்துறையி லாடியரு ளங்கணரோ. 28

ஆரா வமுதோ வருட்கடலோ வெம்முடைய
தீராத துன்பமெலாந் தீர்க்குஞ் சிவக்கொழுந்தோ. 29

கருது மடியார் கவலையெலாம் போக்கி
மருத நிழலினிடை வாழ்ந்தருளு மாமணியோ. 30

—மகாமகோபாத்தியாய, டாக்டர்.
உ. வே. சாமிநாதையர்

ARCHIVES LIBRARY
Cla. No.
107574
Q23;38.21193.7
N80

8A/2-71